விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 043 வள்ளுவர் ஆண்டு 2055 தை 17 புதன்கிழமை (31.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.


kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# அரசுக்கு எதிராக பாரிய போராட்டம்



- போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை, நீர்த் தாரைப் பிரயோகம்.
- கண்ணீர்ப் புகையால் பாதிக்கப்பட்டு முஜிபுர் ரஹ்மான் வைத்தியசாலையில்.
- பேரணியில் காயமடைந்த சிலர் வைத்தியசாலையில் அனுமதி.

(04ஆம் பக்கம் பார்க்க)



## ரணில் - ராஜபக்ஷ அரசுக்கு தேர்தலை நடத்த முதுகெலும்பில்லை

### ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர்



(கொழும்பு)

ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு தேர்தலை நடத்த முதுகெலும்பு இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். 15

### சுன்னாகம் கந்தரோடையில்

## இளம் குடும்பஸ்தர் குத்திப் படுகொலை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த சந்திரநாதர் கோபிராஜ் (வயது-36) 15

### வவுனியாவில்

## இளம் பெண் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா குருமன் காடு கோவில் வீதிப் பகுதியில் கிணற்றிலிருந்து 29 வயதுடைய இளம் பெண்ணின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா 15

## வலிகாமம் வடக்கில் பொதுமக்களிடம் மீளக் கையளிக்கப்பட்ட நிலங்களில்

### 500 ஏக்கரை சுவீகரிக்க இரகசிய முயற்சி

(கொழும்பு)

வலிகாமம் வடக்கில் மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்ட நிலங்களில் இருந்து 500 ஏக்கரைச் சுவீகரிக்க இரகசிய முயற்சி இடம்பெறுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

யாழ்.சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி எனும் பெயரில் மேலதிக தேவைகளுக்காகத் தற்போது படையினரிடம் உள்ள நிலங்களுடன் 500 ஏக்கரைச் சுவீகரித்துத் தருமாறு விமானப் போக்குவரத்து அதிகார சபை விடுத்த கோரிக்கைக்கமைய நேற்று நிலஅளவைத்திணைக்கள அதிகாரிகள் 15

### அமைச்சுகளுக்கு

## புதிய வாகன இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு, சுகாதார அமைச்சு, தொழில் மற்றும் 15

## மானிப்பாய் பொலிஸாரால் ஐந்து இளைஞர்கள் கைது

### பொலிஸார் மீது தாக்குதல் முயற்சி என குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

பொலிஸார் மீது தாக்குதல் முயற்சி குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை சந்தி மற்றும் குளப்பிட்டி சந்திக்கு இடைப்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் 15

### சுன்னாகத்தில்

## எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புனித அந்தோனியார் வீதியில் எரிந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கல்லடியை சொந்த 15

### மன்னார் மாவட்டத்தில்

## காற்றாலை மின்னுற்பத்தி

### அமைச்சரவை அனுமதி

(மன்னார்)

மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மன்னார் தீவில் காற்றாலை மின்னுற்பத்தி நிலையமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியின் கீழ் 47 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## லங்கா மஹால்(PVT) LTD



உள்நாட்டு. வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை

லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1790/=
ஜேர்மனி - 1690/=
கனடா - 2150/=
சுவிஸ் - 1990/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(18813)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்துதரப்படும்.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு.
**077 8393 974**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு
காணி A9 வீதி முகப்புடன் விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
வட மாகாண சபை 300 மீற்றர்
கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்
(18840)

**076 788 0591 | 077 129 4999**



## தாய்லாந்து சுற்றுலா

தாய்லாந்தில் 4 இரவு 5 பகல் தங்குவதற்கான சிறந்த சந்தர்ப்பம். தங்குமிட வசதிகள் காலை உணவுடன் தரப்படும், விமான பயணச்சீட்டு, விசா தங்குமிடம் அனைத்திற்கும் ரூ300,000 மட்டுமே.
இன்றே விண்ணப்பிக்க எம்முடன் இணையுங்கள்

**Hybrid International hub (pvt) ltd**

021 222 1265, 077 815 5920,
076 250 0098
(C-8246)


## மக்களின் நெருக்கடிகளுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்

### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இரண்டாம் காலாண்டில் மக்கள் எதிர் நோக்கும் சிரமங்கள் படிப்படியாக குறையும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.


அநுராதபுரத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அடுத்த சில மாதங்களில் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத் தன்மையை நோக்கி நகரும்.

இதன்போது, பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள வறிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த தேவையான நடவடிக் கைகள் மேற்கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(ம-7)

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
14 - 02 - 1951

**மறைவு**
30 - 01 - 2024

# கார்த்திகேசு செல்லத்துரை

## ( உரிமையாளர் சோபனா நகை மாளிகை )

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கோயில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு செல்லத்துரை அவர்கள் நேற்று (30.01.2024) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராஜா பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், பரமேஸ்வரி, மகேஸ்வரி, இராசதுரை, காலஞ்சென்ற நகுலேஸ்வரி, இராசராணி புஸ்பராணி, நளினிகலா, தயாபரன் மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சத்தியரூபன் **(சிறிநதியா நகை மாளிகை)** அவர்களின் அன்பு மைத்துனரும் நவநீதன் **(நியூ சிறிநதியா நகை மாளிகை, சிறிநதியா கலர் லாப்)**, ஸ்ரீலதா (ஆசிரியை - திருக்குடும்ப கன்னியர்மடம்), ஸ்ரீரேகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், திருநெல்வேலி சமுர்த்தி வங்கி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீநதியா, சஜீவ் **(சோபனா நகை மாளிகை)**, திரு ஆரூரன் (நகர அபிவிருத்தி அதிகார சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஷப்தமி, அனித்ரா, ஹனுமித்ரன், ஆஹர்சனன், ஆருத்ரா, ஆத்ரேயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் நாளை (01.02.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
மகன், மைத்துனர்
(சிறிநதியா நகை மாளிகை )
077 236 7416

இல. 359 /12, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C-8247)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வீதமான சிறுவர்கள் முன்பள்ளிக்கு செல்வதில்லை

## கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டு

**(கொழும்பு)**

**4 வயது பூர்த்தியான குழந்தைகளில் 30 வீதமானோர் முன்பள்ளிக்கு செல்வதில்லை என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

கல்வி அமைச்சின் தலைமையில் தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.


அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்பகால குழந்தைப் பருவ வளர்ச்சி மிகவும் முக்கியமானது. உலகில் இது குறித்து அதிக கவனம் செலுத்தப்படுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் சுமார் 6000 முன்பள்ளி டிப்ளோமாதாரிகள் உள்ளனர்.

இந்நிலையில் 2025ஆம் ஆண்டு முதல் கல்வித்துறையில் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படுமானால் முதலாம் தரத்திற்குச் செல்லும் குழந்தைகளின் முன் குழந்தைப்பருவ வளர்ச்சியையும் அதற்கு ஏற்ற வகையில் மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# சுதந்திர தின ஒத்திகை நிகழ்வு

## நடுவானில் விபத்துக்குள்ளான பரசூட்



(கொழும்பு)

காலி முகத்திடலில் இடம்பெற்று வரும் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுக்கான ஒத்திகை நிகழ்வின் போது ஏற்பட்ட அனர்த்தத்தில் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

பரசூட் சாகச ஒத்திகையின் போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அனர்த்தத்திற்குள்ளானவர்களில் இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் மேலும் இருவர் நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு காலிமுகத்திடல் பகுதியில் ஒத்திகை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# கதிரைச்சின்னத்தில் புதிய கூட்டணி மைத்திரியின் புதிய வியூகம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைமையில் எதிர்காலத்தில் கதிரைச் சின்னத்தில் புதிய கூட்டணி ஒன்று அமைக்கவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் முன்னணியின் நிறைவேற்று குழுகூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு இதனைத் தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் நாட்களில் கட்சியின் யாப்பின் திருத்தம் செய்ததன் பின்னர், நிறைவேற்றுக்குழுவுக்கு புதிய தலைவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஐக்கிய மக்கள் முன்னணியின் நிறைவேற்று சபைக்கு என்னால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதாவது கதிரையின் அடையாளத்துடன் ஐக்கிய மக்கள் முன்னணி என்ற பரந்த அமைப்பை நாம் உருவாக்கவுள்ளோம்.

ஏற்கனவே பல அரசியல் கட்சிகள் மற்றும் தனிநபர்கள் இணைந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.



நாங்கள் அரசியலமைப்பை திருத்த வேண்டும். அந்த அரசியலமைப்புகளை எமது கட்சி தலைமையகத்தில் திருத்தம் செய்வோம். அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு புதிய நிர்வாகிகள் சபையொன்றை நியமிக்க எதிர்பார்க்கின்றோம்.

வெற்றிலைச் சின்னத்தை பெற முடியாது. அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. வழக்குத் தொடுத்துள்ள விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உள்ளிட்டவர்கள் இராஜினாமா செய்து வெற்றிலையுடன் கூட்டணியில் இணைவார்கள் என நம்புகிறோம் என மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# இலங்கையை வந்தடைந்தது பாகிஸ்தான் கடற்படைக்கப்பல்



(கொழும்பு)

பாகிஸ்தானின்கடற்படைக் கப்பலான சைஃப் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

துறைமுகத்தை வந்தடைந்த பாகிஸ்தான் கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர்.

இக்கப்பல் 123 மீற்றர் நீளமுள்ள போர்க்கப்பல் ஆகும். (நி-5-6)


உ

ஓம் சிவகுக முருகா

**நல்லூர் முருகன் எஜமான் தாயார் குகபதம் ஆனந்தசங்காரக்கூத்தன் சீவனைச் சிவமாக்கினார்.**



மாணிக்கவாசகர் இறைவனுடன் கலந்த நட்சத்திரம்- "மகம்" ஆன்மா பிரிந்தது. சண்டேஸ்வரர் குருபூசை தினத்தில் உடம்பு பஞ்சபூதங்களுடன் கலந்தது- "ஓம் நமசிவாய".

ஆனந்தசங்காரத்துப் பயன் எடுத்த உடம்பு செம்பானது பொன் ஆவது போன்று சீவன் சிவமயமாய் ஆகும்- திருமூலர் திருமந்திரத்தில் 902 யாத்திரை பத்து திருவாசகம் "சேரக் கருகதிச் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்" சிவபுரம் சேர்வதை எண்ணி உள்ளத்தை திருத்தமாக பொய்யிற் கிடந்து புரளாமல் இறைவன் திருவடியையே விரும்பி ஆலயத்தில் அமைதியாக வழிபட்டவர்.

குழைத்தப்பத்தில் ஆத்ம நிவேதனமாக ஆலயத்தில் இறைவனுக்கு அர்ப்பணித்தலாம். "வேண்டத்தக்கது அறிவோய் நீ" (திருவாசகம் 501) அமரர் அம்மா விரும்புவதல்லாது வேறில்லை என நல்லூர் ஆலயத்தில் வழிபாட்டுச் சிறப்பிற்கு அருட்பணியாற்றியவர். ஓம் நமசிவாய இதனை

**திருப்புகழ்-840-திருவடியைக் கூட அழியா வரமே தருவாயே**

**விழு தா தெனவே கருதா துடலை**
**வினைசேர் வதுவே புரிதாக**
**விருதா வினிலே யுலகா யதமே**
**லிடவே மடவார் மயலாலே**
**அழுதா கெடவே அவமா கிடநா**
**ளடைவே கழியா துணையோதி**
**அலர்தா ளடியே னுறவாய் மருவோ**
**ரழியா வரமே தருவாயே**
**தொழுதார் வினைவே ரடியோ டறவே**
**துகள்தீர் பரமே தருதேவா**
**சுரர்பூ பதியே கருணா லயனே**
**சுகிர்தா வடியார் பெருவாழ்வே**
**எழுதா மறைமா முடிவே வடிவே**
**லிறைவா எனையா ளுடையோனே**
**இறைவா எதுதா வதுதா தனையே**
**இணைநா கையில்வாழ் பெருமாளே**

வாழ்நாள் முழுமையும் உன்னைப் புகழ்ந்து மலருற்ற உன் திருவடியே அடியேனுக்கு உற்ற உறவாகக் கூட்டி வைக்கும் ஒப்பற்றதும் அழியாததுமான வரத்தை தந்தருள்க. தொழுகின்ற அடியார்களுடைய வினையின் வேர் அடியோடு அற்றுப் போகக் குற்றமற்ற மேலாம் பதவியையே தருகின்ற நல்லைக் குமரனே!

**எழுதா மறையும் எழுதும் மறையும் வழுவாது கேட்டு மகிழ்ந்த அம்மையை ஆட்கொண்டாட கூரிய வேலை ஏந்தும் நல்லைக் கந்தனே ஓம் சாந்தி**

க.கு.க.சிவபாலன்,
ஈழத்துச் சிதம்பர
மாணிக்கவாசகர் மடாலயம் பாதுகாவலர். (சி-8243)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யாழின் நாயகன்' உதைபந்தாட்ட தொடர்; வல்வெட்டி,வதிரி அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி



யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடரில் வல்வெட்டி ஒற்றுமை மற்றும் வதிரி பொம்மேர்ஸ் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட "யாழின் நாயகன்" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் வல்வெட்டி ஒற்றுமை அணியை எதிர்த்து புங்குடுதீவு ஈஸ்வரன் அணி மோதியது. இதில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடி 4:4 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தன. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. பலத்த சவால்களுக்கு மத்தியில் வல்வெட்டி ஒற்றுமை அணி 11:10 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மேர்ஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் அண்ணா ஸ்ரார் அணி மோதியது. இதில் வதிரி பொம்மேர்ஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-90)


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

**15.02.2024 தொடக்கம் 31.12.2024 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு புலோப்பளை பொதுச் சந்தை மற்றும் புலோப்பளை ஆட்டிறைச்சிக்கடை போன்றவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்வி அறிவித்தல் - 2024**

ஏலக் கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 31.01.2024 - 13.02.2024 பி.ப 2.00மணி வரை
ஏலக் கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 13.02.2024 பிற்பகல் 2.00 மணி
ஏலக் கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 13.02.2024 பிற்பகல் 2.00 மணி
ஏலக் கேள்வி நடைபெறும் இடம் :- தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

| இல. | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) |
|---|---|---|---|
| புலோப்பளை உபஅலுவலகம் | | | |
| 01 | மரக்கறி மற்றும் மீன்சந்தை | 1,683,297.62 | 32,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக்கடை | 59,553.87 | 5,000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணத்தினை 13.02.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன் செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
03. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
04. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் ஏலத்தொகையின் 1/3 பங்கு பாதுகாப்பு வைப்பு பணத்தை செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பு வைப்புப்பணத்தை உடனடியாக செலுத்த தவறும்பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகைக்கு வழங்கப்படும்.
05. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாத வாடகையினை மாதாந்தம் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படவேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06. சித்திகர ஏலதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
07. ஏலக்கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
08. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

த.தர்சினி,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை. (C-6245) 31.01.2024


## அரசுக்கு...

வற் வரி விதிப்பு உள்ளிட்ட அரசாங்கத்தின் மக்களைப் பாதிக்கின்ற செயற்பாடுகளுக்கு எதிர்ப்பினைத் தெரிவித்து, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் நேற்று கொழும்பில் பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வற் வரி அதிகரிப்பு, மருந்துப் பற்றாக்குறை, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்ட அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் ஒட்டுமொத்த மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இவற்றுக்கு எதிர்ப்பினை வெளியிட்டு, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு நகரமண்டபத்திற்கு முன்பாக ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டப் போரணியில், நாடளாவிய ரீதியாக இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்ஜித் மத்துமபண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.மரிக்கார், ஹர்ஷன ராஜகருணா மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், ஹிருணிகா பிரேமசந்திர உள்ளிட்ட கட்சியின் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, கொழும்பு புறநகர் பகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சக்தியினால் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தப் போராட்டத்துக்கு முன்பதாகவே பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களுக்கு அமைய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியமான 16 உறுப்பினர்களுக்கு எதிராக நீதிமன்றம் நேற்று தடை உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

இந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் நேற்று நடைபெற்றது. எதிர்ப்புப் பேரணியானது நகரசபை மண்டபத்திலிருந்து முன்னோக்கிச் சென்ற நிலையில், பொது நூலகத்திற்கு முன்பாக பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியும், நீர்த்தாரைப் பிரயோக வாகனங்களைக் கொண்டும் பேரணியை முன்னோக்கி நகராமல் தடுக்க முற்பட்டனர். எனினும், போராட்டக்காரர்கள் முன்னோக்கி நகர முற்பட்டபோது, பாதுகாப்புத் தரப்பினரால் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன பொலிஸாரின் கண்ணீர்ப் புகையினால் பாதிக்கப்பட்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார். மேலும் பேரணியில் காயமடைந்த ஒரு சிலர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி.மாவட்ட செயலகத்தில் தகவல் அறியும் புதிய செயலி அறிமுகம்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தகவல்களை பெற்றுக் கொள்ளும் வகையில் புதிய செயலி ஒன்று நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

அனைத்து தரப்பினருக்கும் தேவையான தகவல்களை இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் வடிவமைக்கப்பட்ட குறித்த செயலி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.




மாவட்ட செயலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கிளையின் ஒழுங்குபடுத்தலில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் வழிகாட்டலில் மாவட்ட விதாதா உத்தியோகத்தர் த.முரளிதரனால் குறித்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் திணைக்களங்களின் மாவட்ட இணைப்பாளர்களுடனான கலந்துரையாடலின் நிறைவில் குறித்த புதிய செயலி இவ்வாறு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதனூடாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்துடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட தேவையான பல தரவுகளை இந்த புதிய செயலியின் https://kilisec.info மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

(நி-5-6-100-316-350)


# மரண அறிவித்தல்



தோற்றம் 19 – 09 – 1960

மறைவு 29 – 01 – 2024

## திருஞானச்செல்வம் ஆனந்தநடேசன் (ஜோதி)

(Coral Tasty Food Industries உரிமையாளர்)

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் 117, ஐயனார் வீதி, தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானச்செல்வம் ஆனந்தநடேசன் நேற்றுமுன்தினம் (29.01.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருஞானச்செல்வம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விஜயசிங்கம் நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயகலாவின் அன்புக் கணவரும் சரவணஹரனின் (உயர்தர மாணவன், யாழ். இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நளினியின் அன்புச்சகோதரனும், அமரர் பத்மநாதன் (ஆயுர்வேத வைத்தியர்) மற்றும் தயாபரன் (தயா அச்சகம்), விஜயராணி, விஜயதேவி, தயானந்தன், விஜயகுமாரி, விஜயகௌரி, தயாபாலன் (ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் குமரகுருபரன், கோகிலறமணன், செல்வபாரதி, பவதாரணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

117, ஐயனார் கோவில் வீதி,
கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்: விஜயகலா (மனைவி)
சரவணஹரன்(மகன்)
077 612 8268

(சி-8250)



என்றும் அழியா நினைவுகளுடன் வாழும் பாசமலர்களின்

# 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கலாபூஷணம்
செல்லையா மெற்றாஸ்மயில்

திதி: 31.01.2024

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறைந்து பதினான்கு ஆண்டுகள்
ஆனாலும் எம் நினைவலைகளில்
நித்தம் வாழும் அன்புள்ளங்களே!
உங்கள் பிரிவை மாறாத வடுக்களாய்
மனதில் சுமந்து வாழ்கின்றோம்.

அன்புச் சகோதரர்களின்
ஆத்மா சாந்திக்காக
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



திருமதி. உதயராணி
கோபாலகிருஷ்ணன்

18, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்
தொ.இல:- 021 222 3586

(18715)


# இராசிபலன்

31.01.2024
தை 17, புதன்கிழமை
பஞ்சமி முற்பகல் 9.41 மணிவரை

அத்தம் முன்னிரவு 11.06 மணிவரை
சுபநேரம் -5.06-6.36 மணிவரை
இராகுகாலம்-12.36-2.06 மணிவரை

சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்

வளவன்




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், குடும்ப மகிழ்சிசி கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு.




அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




பொதுக் காரியங்களில் நாட்டம் செல்லும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தொழில் வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும்.




வியாபர விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நிதிநிலை உயரும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.




ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் பிரியப்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் வாய்ப்புண்டு, சார்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறை வேறும்.




குடும்பத்தினருடனும் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.




சகோதார ஒற்றுமை பலப்படும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.




வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள்.




மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி கிடைக்கும், நல்லவர்களின் தொடர்பில் நலம் காணும் நாள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.




மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது, கடன் பாக்கிகள் வராமல் தாமதமகலாம், வேலைச் சுமை கூடும், பிரயாண பயமுண்டு.




சொந்த பந்தங்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம்காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

வாசிப்போர் [illegible] சிலர் மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியர் தமிழியலுக்கு ஆற்றிய பங்களிப்பு

## நிகழ்நிலையில், உரைத்தொடர் இறுதிநாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
புதுடில்லியில் உள்ள ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தின் சிறப்பு நிலைத் தமிழ்த்துறை நடத்தும் தமிழியலுக்கு பேராசிரியர்கள் சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரின் பங்களிப்பு பற்றிய உரைத்தொடரின் இறுதிநாள் நிகழ்வு இன்று மாலை 6 மணி தொடக்கம் 8 மணிவரை நிகழ்நிலை ஊடாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றைத் தொர்ந்து புதுப்பிக்கும் ஆவணம் திருவாரூர் தமிழ் நாடு மத்தியப் பல்கலைக் கழக தமிழ் உதவிப் பேராசிரியர், முனைவர் க.ஜவகர், இலங்கைத் தமிழியலின் அடையாளம் உத்திரப்பிரதேசம் அலீகர் முஸ்லிம் பல்கலைக்கழக தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.தமிழ்ச்செல்வன் மற்றும் ஈழத்துப் பண்பாடு மேற்கு வங்காளம் விஸ்வபாரதி பல்கலைக் கழக முனைவர் பட்ட ஆய்வாளர் மு.முரளிதரன் ஆகியோர் ஆய்வுகளை நிகழ்த்தவுள்ளனர்.

ஏற்புரையினை இலங்கை யாழ்.பல்கலைக்கழக தகைசால் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்தவுள்ளார். கூகுள் மீட் https://meet.google.com/giv-yphd-shd. (நி-5-6)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)
வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகு நடத்தும் 2024 இற்கான விருது தெரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலைக்குரிசில் விருதுத் தெரிவு, இளங்கலைஞர் விருதுத் தெரிவு, சிறந்த நூற்பரிசுத் தெரிவு, போட்டிகளுக்கான நடுவர்கள் குழு, இவ் விருதுக்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு எதிர்வரும் 31.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் மேலதிக தகவலுக்கு 021 205 4105 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும்.

அல்லது விண்ணப்பப் படிவங்களை www.np.gov.lk / www.edumin.np.gov.lk எனும் இணையத்தளங்களின் மூலமாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப்பணிப்பாளர் லாகினி நிருபராஷ் அறிவித்துள்ளார். (நி-6)



"மரம் வளர்ப்போம் பசுமையான இயற்கையை பேணுவோம்" எனும் தொனிப்பொருளில் நாகர் கோவில் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மரக்கன்றுகள் லியோ இளைஞர் அணியினரால் நாட்டி வைக்கப்பட்டன.

(படம்: மகாலிங்கம்)

# துன்னாலை காளியாம்பாள் அலங்கார உற்சவம் இன்று

(கரணவாய்)
துன்னாலை வடக்கு நவிடான்பதி மனோன்மணி சக்தி சமேத காளியாம்பாள் தேவஸ்தான முதலாவது அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி பத்து நாட்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை சுமங்கலி பூஜையும் 3 ஆம் திகதி சனிக்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை குடமுழுக்கு உற்சவமும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை பூங்காவனத் திருவிழாவும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் வேட்டைத் திருவிழாவும் 7 ஆம் திகதி புதன்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை இரதோற்சவமும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (நி-5-6-60)

## ஹெரோயினுடன் இரு இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ். இளவாலைப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், இரு இளைஞர்களையும் கைது செய்து சோதனையிட்ட போது இருவரிடம் இருந்தும், தலா 20 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து இருவரையும் இளவாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-33)

# யாழில் மகாத்மா காந்தியின்

## 76 ஆவது சிரார்த்த தினம் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)
மகாத்மா காந்தியின் 76 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் யாழ். இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் காந்திசேவா நிலையத்தினரின் அனுசரணையுடன் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை முன்றலில் நேற்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு திருவுருவப் [illegible]டது.

இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் யாழ்.மாநகர சபை ஆணையாளர் காந்திசேவா நிலைய உறுப்பினர்கள் என பலரும் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு இருந்தனர்.

காந்தியம் காலாண்டு பத்திரிகையின் வெளியீட்டினை யாழ்.இந்திய துணைத் தூதரக அதிகாரி வெளியிட்டு வைக்க யாழ்.மாநகர சபை ஆணையாளர் பெற்றுக் கொண்[illegible]

# சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 500 | 500 | 550 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 240 | 220 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1300 | 960 |
| தக்காளி | 800 | 800 | 800 | 620 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 150 | 150 | 165 |
| கோவா | 700 | 700 | 800 | 750 |
| கரட் | 1800 | 2400 | 1500 | 1800 |
| பூசணி | 180 | 150 | 240 | 165 |
| புடோல் | 300 | 300 | 400 | 280 |
| வாழைக்காய் | 250 | 200 | 300 | 200 |
| சின்ன வெங்காயம் | 380 | 450 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 380 | 420 | 400 | 420 |
| பாகற்காய் | 800 | 800 | 1000 | 500 |
| வெண்டக்காய் | 650 | 300 | 600 | 540 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 200 | 120 |
| பயற்றங்காய் | 600 | 800 | 600 | 520 |
| லீக்ஸ் | 450 | 700 | 800 | 700 |
| பீற்றூட் | 800 | 800 | 800 | 750 |
| கறிமிளகாய் | 1000 | 800 | 1000 | 660 |
| முருங்கைக்காய் | -- | 2000 | -- | 2500 |
| போஞ்சி | 650 | 650 | 800 | 600 |
| கத்தரிதம்புள்ள | 550 | 700 | 450 | -- |
| கீரை - 1 பிடி | 50 | 100 | 150 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 185 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70-110 | 50-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 500 | 260 |
| முள்ளங்கி | 200 | 300 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 60 | 140 |
| வல்லாரை | 80 | 50 | 80 | 70 |
| [illegible] | 100 | 120 | 150 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் விவசாயிகளே அவதானம்!

## சுகாதாரத்துறை எச்சரிக்கை

**(கொழும்பு) நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் மக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதா ரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.**



இது குறித்து சுகாதா ரத்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில் "விவசாயி களுக்கே எலிக்காய்ச்சல் அதிகமாக பரவும் அபா யம் ஏற்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் அவதானமாக செயற்பட வேண்டும்.

காய்ச்சல், தசைகளில் கடுமையான வலி, கண் விழி சிவப்பு நிறம் அடை தல், சிறுநீர் வெளியே ற்றம் குறைவடைதல், சிறுநீருடன் இரத்தம் வெளியேறுதல் ஆகியன எலிக்காய்ச்சலின் அறி குறிகளாகும்.

எனவே, எலிக்காய்ச்ச லினால் பாதிக்கப்பட்டவ ர்கள் உரிய சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண் டும் என்பதுடன், கொதி த்தாறிய நீரையே பருக வேண்டும்" எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.(நி-5-6)

# பகிடிவதைக்கு 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை

## இராஜாங்க அமைச்சர் அதிரடி

(கொழும்பு)

பகிடிவதைகள் தொடர் பான குற்றங்கள் நிரூபிக்க ப்பட்டால், சந்தேகநபர் ஒரு வருக்கு சுமார் 12 ஆண்டு கள் வரை சிறைத்தண் டனை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளன என உயர்கல்வி இராஜா ங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள் ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகங்களு க்கு உள்வாங்கப்படும் புதிய மாணவர்களை இலக்கு வைத்து புரியப்படும் பகிடிவதைகள் தொடர்பில் சட்டரீதியான கவனம் செலுத்தப்படும்.

எனவே, பல்கலைக் கழக மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள சுதந் திரத்தை உரிய வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதுடன் எதிர்கால நலனை சிந்தித்து செயற்பட வேண்டும்.மேலும் அரசி யல்வாதிகள் மற்றும் ஜனா திபதி வேட்பாளர்களை பல்கலைக்கழகங்களுக்கு அழைக்க சில பல்கலைக் கழகங்கள் திட்டமிட்டுள்ள தாகவும் அத்தகைய நட வடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் உயர் கல்வி இராஜாங்க அமை ச்சர் தெரிவித்துள்ளார்.

தயவுசெய்து பல்கலை க்கழகங்களை அரசிய லாக்குவதை நிறுத்து ங்கள். பல்கலைக்கழக ங்கள் கல்வி நடவடிக்கைக ளுக்காகவே உள்ளன.

அரசியல் என்பது அங்கு விவாதிக்கப்படுகி றது. இருப்பினும், அது பாரபட்சமாக இருக்கக் கூடாது. நிகழ்வுகளுக்கு யார் பல்கலைக்கழகங்க ளுக்கு அழைக்கப்பட வேண்டும் என்பதை செனட் மற்றும் அதன் கல் வியாளர்கள் தீர்மானிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.(நி-5-6)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேசசபை உப அலுவலகம்-தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர்-தம்பிஐயா கிருபாகரன்**
**முகவரி -இல 46, 5ஆம் ஒழுங்கை,அரசடி றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை , உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 11, கேணிப்பிட்டிமயான வீதி, இல 35 இல், சொந்தக்காரர் உ.கோ.நவரட்ணம் என ஆதனப்பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது 2006ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 13ஆம் திகதி, பிரசித்த நொத்தாரிஸ் திருமதி.எஸ்.சிவபாதம் முகதாவில் 2823ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி தம்பிஐயா கிருபாகரன் பெண் தவம் என்பவர்களை வந்த டைந்தது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பகுதி மல்லாகம் கோவில்பற்று அளவெட்டி இறையுமான "மந்துக்காடு" நிலப்பரப்பு 03. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ். சிவராஜா அவர்கள் வரைந்த 1536/22.01.2021 ஆம் இலக்க வரைபடத்தின் படி துண்டு -02 ஆக தாட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு -வைத்திலிங்கத்திற்கும் பெண் மீனாட்சிக்கும் உரிய ஆதனமும் உறுதி முடிப்புக்காரரின் ஆதனமும்.
வடக்கு- ஒழுங்கை.
மேற்கு- மாரிமுத்து மகேந்திரனின் ஆதனம்.
தெற்கு -சீனியர் பொன்னையாவின் உரிமைக்காரரின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை தம்பிஐயா கிருபாகரன் பெண் தவம் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் அட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி).** (18836)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.கந்தசாமி சசிகரன் (அதிபர்)



திருமதி.காயிஸ்திரி சுதாகரன்

எமது பாடசாலையின் அதிபர் திரு.கந்தசாமி சசிகரன் அவர்களும் எமது பாடசாலை ஆசிரியை திருமதி.காயிஸ்திரி சுதாகரன் அவர்களும் 31.01.2024 இன்று கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணி பட்டத்தை பெறுவதையிட்டு அகமகிழ்வதுடன் அவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று உயர்வு பெற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம். (18833)

வாழ்த்துவோர்- ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலைச்சமூகம்,
யா/செட்டித்தெரு மெ.மி.த.க பாடசாலை.

# மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

**திருமதி.மாலினி தனராசா**
(பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியை)

சேவை விபரம்

1.கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்
1985.04.16-1989.01.28
2.யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை
1989.01.29-1990.12.31
3.யா/கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாலயம்
1991.01.01-1992.03.02
4.வ/பூவரசங்குளம் ம.வி
1992.03.03-1994.06.30
5. வ/கனகராயன் குளம் ம.வி
1994.07.01-1995.02.28
6.வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்
1995.03.01-2009.05.11
7.வ/கொல்லர்புளியங்குளம் ஸ்ரீராமகிருஸ்ணர் வித்தியாலயம்
2009.05.12-2011.05.15
8.யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
2011.05.16-2024.01.30 (18834)



இன்றையதினம் மணிவிழாவைக் கொண்டாடும் யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் ஆசிரியை திருமதி.மாலினி தனராசா அவர்கள் எமது பாடசாலையில் 13 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் அவர்களின் சேவையை பாராட்டுவதோடு அவர்களது ஓய்வுக்காலம் சிறப்பாகவும் ஆரோக்கியமானதாகவும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்-ஆசிரியர் நலன்புரிக் கழகம். யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்றையதினம் (31.01.2024) நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் கல்விமாணிப் பட்டத்தினைப் பெறுகின்ற எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி. **றெஜிடனியலா சாம்சன்றெக்ஸ்,** திருமதி.**ஜெனாளினி ஜெயாதரன்** இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.இவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று சமூகத்திற்கு சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.




(18825)

வாழ்த்துவோர்--பாடசாலை நல்லுறவுக் கழகம்,யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சுற்றுலாப் பட்டியலில் பின்தள்ளப்பட்ட மாலைதீவு



(மாலே)

இந்தியர்களின் புறக்கணிப்பால் சுற்றுலாத் தலங்களில் மூன்றாவது இடத்தில் இருந்த மாலைதீவு தற்போது ஐந்தாவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் யூனியன் பிரதேசமான லட்சத்தீவுக்கு பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் சென்று வந்தார். அது குறித்த தனது அனுபவங்களை எக்ஸ் வலைதளப் பக்கத்தில் புகைப்படங்களுடன் பதிவு செய்தார். "அமைதியும் அழகும் நிறைந்த லட்சத்தீவு மனதை மயக்குவதாக உள்ளது. நீங்கள் சாகசத்தை விரும்புபவராக இருந்தால் உங்களின் பயணப் பட்டியலில் லட்சத்தீவு இடம் பெற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இதனால் மாலைதீவுக்கு போட்டியாக லட்சத்தீவு சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவின் முயற்சி இருப்பதாக கருத்துகள் முன்வைக்கப்பட்டன. இதையடுத்து, பிரதமரின் லட்சத்தீவு பயணத்தை முன்வைத்து, மாலைதீவு அமைச்சர்கள் உள்ளிட்ட அந்நாட்டின் தலைவர்கள் சிலர் சமூக ஊடகத்தில் இந்தியா மற்றும் பிரதமர் மோடியை அவமதிக்கும் வகையில் கருத்துகளைப் பதிவிட்டனர்.

மாலைதீவு அமைச்சர்களின் கருத்துக்கு இந்தியாவில் பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து இந்திய சுற்றுலாப் பயணிகள் கடும் அதிருப்தி அடைந்தனர்.

இதன் காரணமாக பலரும் தங்கள் மாலைதீவு பயணத்தை ரத்து செய்தனர். இதனால் 10,500 ஹோட்டல்களின் முன்பதிவுகளும், 5,520 விமான டிக்கெட்டுகளும் ரத்து செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் மாலைதீவுக்கு சுற்றுலா பயணிகளின் வருகை வெகுவாக குறைந்தது. இந்த நிலையில் சுற்றுலாத் தலங்களின் பட்டியலில் மாலைதீவு 3 ஆவது இடத்திலிருந்து 5ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. தற்போது 3 ஆவது இடத்தில் சீனா இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## அரச ரகசியங்களை க
## இம்ரான் கானுக்கு 10 ஆன்

(இஸ்லாமாபாத்)

**அரச இரகசியங்களை கசியவிட்டதாக குற்றம் ச பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கா முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஷா ெ குரேஷிக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

சைபர் வழக்கு என அழைக்கப்படும் குறித்த வழக்கு நேற்று ராவல்பிண்டி சிறையில் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இதன்போது அமெரிக்காவிற்கான முன்னாள் பாகிஸ்தான் தூதுவர் அனுப்பிய ரகசியங்களை தவறாகப் பயன்படுத்தியதற்காக இம்ரான் கானை குற்றவாளி என அறிவித்தது.

கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஏப்ரல் வரை பாகிஸ்தானின் பிரதமராக பதவி வகித்த இம்ரான் கான் பாராளு

## மனித மூளையில் வெற்றிகரமாக பொருத்தப்பட்ட 'சிப்'

(வோஷிங்டன்)

அமெரிக்காவை சேர்ந்த உலகின் முன்னணி தொழிலதிபர்களில் ஒருவரான எலான் மஸ்க் நிறுவிய நியூராலிங்க் நிறுவனம் மனித மூளை, நரம்பு மண்டலம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து உயர் தொழில்நுட்ப ஆராய்ச்சியை செய்ய தொடங்கப்பட்டது.


குறித்த நிறுவனத்தின் முதல் முயற்சியான மனிதரின் மூளையில் "சிப் பொருத்துதல்" வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

மிக துல்லியமான முறையில் நடைபெற்ற ஒரு அறுவை சிகிச்சை முறையின் மூலம் இந்த சிப் பொருத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதன் முதற்கட்ட பரிசோதனைகளின் படி குறித்த சிப்பில் இருந்து மின் சமிக்ஞைகளின் பரிமாற்றம் நடக்க ஆரம்பித்தமைக்கான அறிகுறிகள் தென்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

மேலும் பக்கவாதம் போன்ற மனிதர்களை செயலிழக்க செய்யும் நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் மூளையில் மின்னணு சிப்பை பொருத்தி அவற்றை எண்ணங்களின் மூலம் கட்டுப்படுத்தி அதன் பயனாக உறுப்புகளை செயற்பட வைக்க முயல்வதே இந்த ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் என தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

## உலக பணக்காரர்கள் பட்டியலில் பிரான்ஸ் தொழிலதிபர் முதலிடத்தில்



(பாரிஸ்)

பிரான்ஸ் தொழிலதிபர் பெர்னார் அர்னால்ட், உலகபணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் உலகின் பணக்காரர்களில் பட்டியலில் முதலிடத்தில் இருந்த எலான் மஸ்க் தற்போது இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

தற்போது பணக்காரர்களில் முதல் இடத்தில் பிரான்ஸ் தொழிலதிபர் பெர்னார்ட் அர்னால்ட் உள்ளார். அர்னால்டின் சொத்து மதிப்பு 207.8 பில்லியன் டொலராகவும், எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பு 204.7 பில்லியன் டொலராகவும் உள்ளது. (நி-5-6)

## பிரித்தானிய எண்
## தாக்கிய ஹவுதிக் க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசியவிட்ட விவகாரம்

# ண்டுகள் சிறைத் தண்டனை

ம்சாட்டப்பட்ட
ான் மற்றும்
மெஹ்மூத்
னை விதித்து



மன்றத்தில் இடம்பெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்ததை அடுத்து சைபர் வழக்கு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் சிறையில் அடைக்கப்பட்டார்.

அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் பாகிஸ்தான் பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில் அந்நாட்டின் பிரதான எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான தண்டனை நேற்று அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் புடின்

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட வேண்டி ஜனாதிபதி வேட்பாளராக தனது பெயரை விளாடிமிர்புடின் பதிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ரஷ்யாவில் 2000ஆம் ஆண்டில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு அதிகாரபூர்வ ஜனாதிபதியாக பொறுப்பேற்றார்.

தற்போது ஜனாதிபதியாக உள்ள புடினின் பதவிக் காலம் எதிர்வரும் மே மாதத்துடன் நிறைவடைகிறது.

இந்நிலையில் ரஷ்ய பாராளுமன்ற மேல்சபை கூட்டத்தில் ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு மார்ச் 17 ஆம் திகதி நடத்துவது என முடிவு செய்து சபை தலைவர் வேலண்டினா மேட்டிவியங்கோ தீர்மானம் கொண்டு வந்தார்.

பெரும்பான்மை ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து 4 முறை ஜனாதிபதியாக இருக்கும் புடின் மீண்டும் போட்டியிட போவதாக அறிவித்திருந்தார்.

இதையடுத்து தனது கட்சி சார்பில் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக தன் பெயரை மத்திய தேர்தல் கமிஷனில் பதிவு செய்துள்ளார்.

இத்தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதியானால் 2036ஆம் ஆண்டு வரை அவர் ஜனாதிபதி பதவியில் நீடிப்பார். இதற்கான வழி வகை செய்ய ஏற்கனவே சட்ட திருத்தத்தை முன்கூட்டியே கொண்டு வந்து புடின் அமுல்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-5-6)

## ண்ணெய்க்கப்பலை
## கிளர்ச்சியாளர்கள்

(சனா)

ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ஏவுகணைத் தாக்குதலில் செங்கடல் வழியாகப் பயணித்த பிரித்தானிய எண்ணெய்க்கப்பல் தீப்பிடித்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடக்கில் ஏமனுக்கும் கிழக்கில் அரபிக்கடலுக்கும் இடையில் இந்தியப்பெருங்கடலில் ஆழமான இடமாகக் கருதப்படும் ஏடன் வளைகுடாவில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஈரானின் ஆதரவுடன் மேற்குலக நாடுகளால் சந்தேகிக்கப்படும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

"மெர்லின் லுவாண்டா" எனப்படும் எண்ணெய்க் கப்பல் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தியா, ஜப்பான், அமெரிக்க மற்றும் பிரான்ஸ் கடற்படைகளின் உதவியுடன் தீயை அணைத்ததாக பிரித்தானியாவில் உள்ள கப்பல் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இதன்போது 22 இந்தியர்கள் மற்றும் ஒரு பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த பணியாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கப்பல் பாதுகாப்பாக அருகில் உள்ள துறைமுகத்திற்கு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏமனில் உள்ள தங்கள் தளங்கள் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்குப் பதிலடியாக இது அமைந்தது என்று ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

## பிரேசிலில் விமான விபத்து ஏழு பேர் உயிரிழப்பு




(பிரேசிலியா)

பிரேசிலில் இடம்பெற்ற விமான விபத்தில் 7 பேர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த விபத்தானது கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பிரேசிலின் அண்டை நாடான சாவ்பாலோ காம்பினாவில் இருந்து புறப்பட்ட சிறிய ரக விமானம்

பிரேசிலின் சுரங்க நகரமான இட்டா பேலா மீது விமானம் வானில் பறந்து கொண்டிருந்த போது திடீரென கட்டுப்பாட்டை இழந்து தரையில் விழுந்து நொறுங்கியுள்ளது.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த விமானி உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் என்னவென்று தெரியாத நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடந்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6)

## இஸ்ரேலுக்கு உளவு பார்த்த 4 பேருக்கு தூக்குத்தண்டனை வழங்கிய ஈரான்



(டெஹ்ரான்)

இஸ்ரேலுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் ஈரானில் 4 பேருக்கு நேற்றுமுன்தினம் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல் உளவு அமைப்பான மொஸாடுக்காகப் பணியாற்றிய 4 பேருக்கே குறித்த தூக்குத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இஸ்ஃபஹான் நகரில் உள்ள பாதுகாப்புத்துறை தொழிற்சாலையில் கடந்த 2022ஆம் ஆண்டு குண்டு வைத்த குற்றத்துக்காக அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது என செய்தி வெளியாகியுள்ளது.

பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் நாடு உருவானதை ஈரான் ஏற்கவில்லை. ஈரான் அணு ஆயுதம் உருவாக்கி வருவதாகவும் இது தங்களுக்கு ஆபத்து என்றும் இஸ்ரேல் குற்றஞ்சாட்டி வருகிறது.

இதனால் இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் அதீத விலையுயர்வை தடுக்கும் தந்திரோபாயம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எங்களூர் பயிர்ச்செய்கை பல்வேறு இடர்களுக்கு மத்தியில் பலவகையான பீடைநோய் என்பனவற்றின் சேதங்களை தாக்குப் பிடித்து முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருக்கிறது. இந்த நிலையில் எதிர்காலத்து விவசாயத்தின் நிலை மிகவும் தளம்பலுக்குள்ளாகும் என எதிர்வுகூறப்படுகின்றது.

மரக்கறிப் பயிர்கள் இம்முறை பெய்த அதீத மழையின் காரணத்தினால் அழிவுக்குள்ளாகியதால் அதனது விலைகளில் அதிகூடிய தளம்பல் பதிவாகியிருக்கின்றது. மரக்கறிப் பிரியர்களுக்கு இந்த அதீத

இந்த நிலைமையில் குறிப்பாக காலநிலை எதிர்வுகூறலில் அவசியம் முன்னேற்றம் ஏற்படல் வேண்டும். விவசாயத்தையும் விவசாயியையும் காப்பாற்றும் நிலைக்கு வடமாகாணத்தில் காலநிலையை துல்லியமாக எதிர்வுகூறும் நிலையம் உருவாக்கப்பட்டு அதன் மூலம் விவசாயிகளுக்கு முன்னேற்பாடான தகவல்கள் தெரிவிக்கப்படல் அவசியம்.

இந்த கட்டமைப்பு உருவாக்கப்படாததன் காரணமாகவும் கிடைத்த தகவல்கள் சரியாக விவசாய பெருமக்களுக்கு சென்றடையாத காரணத்தினாலும் பூநகரிப் பகுதியில் பாதையில் காயவைக்கப்பட்ட அறுவடை செய்த நெல் பெய்த அடர்மழையில் நனைந்து மேலும் விவ

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...

விலையுயர்வு ஏமாற்றத்தையும் எதிர்ப்புணர்வையும் உருவாக்கியிருக்கின்றது.

விவசாயச் செய்கையில் காலந்தாழ்த்திய பயிர்ச்செய்கைகள் நடைமுறையிலிருந்தபோதும் காலநிலை அசம்பாவிதங்களினால் இத்தகைய விலையுயர்வு வழக்கமாக காலபோகத்தில் இருக்கின்றபோதும் இம்முறை பொருளாதார இடர்நிலை காரணமாக மரக்கறிப்பொருட்களின் விலைகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்த முடியாமல் போயிருக்கின்றது.

நூறு கிராம் கரட் இருநூறு ரூபாவாகியிருக்கும் துர்ப்பாக்கிய நிலை வரலாற்றில் இவ்வருடம் பதிவாகியிருக்கின்றது. விவசாயிகளுக்கு இந்த விலையுயர்வு இலாபத்தை தந்தாலும் நுகர்வோருக்கு வாழ்வாதாரத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதனை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

பயிர்ச்செய்கை திட்டமிடல்கள் குறிப்பிட்ட திறனுடனான பயிற்சிகளுடன் நடைபெற்றும் இவ்வாறான அதியுயர் விலையேற்றம் ஏற்பட்டமை துர்ப்பாக்கியமானதாகும். வழமைக்கு மாறாக விலை உயர்வை இவ்வாறு கட்டுக்கடங்காமல் ஏற விடாமல் தடுப்பதற்கு உரிய தந்திரோபாயங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இன்னமும் சாக்குப்போக்கு சொல்லாமல் இவ்வாறான விலையுயுர்வை தடுப்பதற்கான வழிவகைகளை காலநிலை எதிர்வுகூறலுடன் நடைமுறைக்கு கொண்டு வருதல் வேண்டும்.

காலநிலை மாற்றம் எதிர்பார்த்தளவில் இல்லாமல் அதீத மாற்றத்துக்குள்ளாகும் நிலை, இம்மாதிரியான காலநிலை இடர்களுக்கு காரணமானதாக இருந்தாலும் தற்போதுள்ள விஞ்ஞானத்தின் வளர்ச்சி இன்னமும் துல்லியமாக இந்த மாற்றங்களை எதிர்வுகூற முடியாதிருக்கின்றது.

சாயிகளை கஷ்டத்துக்குள்ளாக்கியிருக்கின்றது.

தகவல் தொழில்நுட்பம் அதீத வளர்ச்சியில் வெற்றிநடை போடும் போது காலநிலை மாற்ற எதிர்வுகூறல்கள் மேலை நாடுகளிலுள்ள தொழில்நுட்பத்தை உள்வாங்கி இன்னும் துல்லியமாக விவசாயப் பெருமக்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்கப்படல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறையின் கலாநிதி பிரதீபராஜா தன்னுடைய புலமையின் வெளிப்பாடாக முகப்புத்தகத்தில் இவ்வாறான துல்லியமான எதிர்வுகூறலை தரமான வரைபடங்களுடனான தகவல்களுடன் வெளிக்கொணர்வதனை காணலாம்.

இதில் பலர் நன்மையடைந்துள்ளதனை அவர்களின் கருத்துக்களிலிருந்து காண்லாம். இருப்பினும் இத்தகைய தகவல்கள் அனைத்து விவசாயப் பெருமக்களுக்கும் கிடைக்கவில்லையென்ற உணர்வு வெளிக் கொணரப்பட்டிருக்கின்றது.

இவருடைய புலமையை முதன்மைப்படுத்தி வடமாகாணத்துக்குரிய காலநிலை எதிர்வுகூறல் மற்றும் ஆராய்ச்சி மையத்தை வளிமண்டலத் திணைக்களத்தின் இணைப்புடன் வடமாகாணத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துறைசார் வல்லுநர்களை இணைத்து விரைந்து உருவாக்கல் அவசியமாகும்.

வெறுமனே எதிர்வுகூறல்களாக இல்லாமல் காலநிலை மாற்றம், மழைவீழ்ச்சி, வறட்சி, பயிர்ச்செய்கை, பீடைநோய் பாதிப்பு,சந்தைப்படுத்தல் என பலவகைத் தகவல்களும் இதில் வெளிக்கொணரப்படல் வேண்டும்.

மேலும் வீட்டுத்தோட்டங்களில் பயிர்ச்செய்கை செய்யப்படும் மரக்கறிப் பயிர்களை கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும் நடைமுறையும் உருவாக்கப்படல் வேண்டும்.

விவசாயத் திணைக்களத்தால் முன்னுரிமை கொடுத்து நடைமுறைப்படுத்தப்படும் வீட்டுத்தோட்டங்களின் விளைபொருட்களை தகுந்த சந்தைப்படுத்தல் பொறிமுறை மூலம் சந்தைப்படுத்தும் பொறிமுறையை உருவாக்கினால் சிறுதோட்ட வெள்ளாண்மை சந்தைக்கு வந்து விலைகளின் தளம்பலை ஓரளவுக்கு எதிர்வு கொள்ளும்.

கரட்டுக்கு நுவரெலியாவையும் தம்புள்ள சந்தையையும் காத்திராது எங்களூர் மரக்கறிப் பயிர்களின் உற்பத்தியை ஊக்குவித்து அவற்றை எம்மவர் நியாய விலையில் கொள்வனவு செய்ய வழிவகுத்தல் அவசியமானதாகும்.

ஒவ்வொருமுறையும் கற்றறிதல் என்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் என்றும் கூறிக் கொண்டிருக்காமல் அவசியமான திட்டமிடல்கள் மரக்கறிப் பயிர்களின் உற்பத்தி சார்பாக ஏற்படுத்தப்படுமானால் அதீத விலைத் தளம்பல்களை ஓரளவுக்கேனும் மரக்கறிப் பயிர்கள் தட்டுப்பாடான குறிப்பாக சமய விழாக்கள் மற்றும் நிகழ்வுகள் காலங்களில் கட்டுப்படுத்துவதன் மூலம் நுகர்வோருக்கு தேவையான மரக்கறிப் பயிர்களை கிடைக்க செய்ய முடியும்.

விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சியையும் குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தின் மேம்பாட்டையும் இத்துறைசார்ந்து பயன்பாட்டுக்கு கொண்டுவர இது சார்ந்த புலமையாளர்களின் உதவியுடன் திட்டங்கள் நடைச் சாத்தியமான பொறிமுறை அமுல்படுத்தப்படல் அவசியமாகும்.



# இன்று ஒரு தகவல் 22



தென்கச்சி கோசுவாமிநாதன்

## பணம்

இந்த உலகத்திலே பணம் தான் பெரியது என்று நினைக்கிறவர்கள் தான் அதிகம். பணத்துக்காக எதையும் செய்ய தயாராக இருக்கிறவர்கள் பல பேர்.

பெரியவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? பணத்தைக் கொண்டு இந்த விஞ்ஞான உலகத்திலே போகப்பொருள் அத்தனையும் அனுபவிக்கலாம் என்று நினைக்கிறோம். இது நிலையில்லாத போலி வாழ்க்கை. பணத்தை விட, அதைக் கொண்டு அடையும் போக வாழ்க்கையை விட மகத்தான சக்தி எங்களிடம் இருக்கு. அதை நாம் உணரவில்லை. பணத்தினால் பெற முடியாத ஆனந்தத்தை, அமைதியை, நிலையான வாழ்க்கையைக் கொடுக்கக்கூடிய அந்த சக்தி எது? அது தான் பரோபகாரத்தை வளர்க்கும் தெய்வ நம்பிக்கை. ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையுடன் கூடிய வாழ்க்கை இவைதாம் உண்மையான செல்வங்கள். இதை மறந்துவிட வேண்டாம்.

அப்படி என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அதை நாம் கேட்கிறோமா என்பது வேறு விடயம்.

சர்ச்சில் ஒருதரம் பி.பி.சி ஒலிபரப்பிலே பேசுவதற்குப் போயிருக்கின்றார்.அப்போ ஒரு டாக்சியை பிடித்துக் கொண்டு போயிருக்கிறார். அவரை டாக்ஸி டிரைவர் நேரில் பார்த்ததில்லை. இவர் தான் சர்ச்சில் என்பது அவருக்குத் தெரியாது.

சர்ச்சில் இறங்கினார். டாக்ஸி டிரைவரைப் பார்த்து கேட்டார். இதோ பாருப்பா. அரைமணி நேரம் வெளியே காத்திருக்கிறியா? என்று கேட்டார்.

அதெல்லாம் முடியாதுங்க. ஒரு முக்கியமான வேலை இருக்கு என்றார் டாக்சி டிரைவர்.

என்ன வேலைன்னு கேட்டார் இவர். சர்ச்சில் துரை ரேடியோவில் பேசப் போகிறார். அதை நான் போய் கேட்க வேண்டும் என்றார் அவர். சர்ச்சில் பார்த்தார். கொஞ்சம் பணத்தை எடுத்தார்.

இந்தா வைத்துக்கொள். கொஞ்ச நேரம் காத்துக் கொண்டிரு என்றார்.

அப்படி என்றால் சரி சார். அந்த சர்ச்சில் பேசினா எனக்கென்ன கவலை. அவர் எப்படியாவது போகட்டும். அப்படி என்று சொல்லிவிட்டு நிம்மதியா பணத்தை வாங்கி பையிலே போட்டுக் கொண்டாராம் டாக்ஸி டிரைவர்.

பணத்திற்கு எவ்வளவு தூரம் மரியாதை கொடுக்கிறார் பார்த்தீங்களா?

ஒரு நீச்சல் குளம். அதிலே தவறுதலா ஒருத்தர் இறங்கி விட்டார். அவருக்கு நீச்சல் தெரியாது. தண்ணியிலே தத்தளித்துக் கொண்டிருந்தார். இன்னொருத்தர் அதைப் பார்த்தார். அவருக்கு நீச்சல் தெரியும். திடீர்ன்னு தண்ணீரிலே குதித்தார். அவரைக் காப்பாற்றி கரையிலே கொண்டுவந்து சேர்த்தார்.

என்னை காப்பாற்ற வேண்டும் என்கிற எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது என்று கேட்டார் அவர்.

அதோ ஒரு அறிவிப்புப் பலகை இருக்கு பாருங்க. அதைப் பார்த்ததும் தான் வந்தது என்றார் இவர். அதிலே என்ன எழுதியிருந்தது தெரியுமா?

நீச்சல் தெரியாதவர்கள் தத்தளிக்கிற போது அவர்களை காப்பாற்றுகிறவர்களுக்கு அன்பளிப்பு 100 ரூபாய் என்று எழுதியிருந்தது. காப்பாற்றப்பட்டவர் சொன்னார்.

நானா இருந்தா காப்பாற்றுவதற்கு இவ்வளவு அவசரப்பட்டிருக்க மாட்டேன். இன்னும் கொஞ்ச நேரம் காத்துக் கொண்டு இருந்திருப்பேன் அப்படி என்றார். ஏன் அப்படி என்று கேட்டார் இவர்.

நீங்கள் அந்த அறிவிப்புப் பலகையிலே எழுதியிருக்கிறது முழுவதையும் படிக்கவில்லை போல் இருக்கு. படிச்சிருந்தா என்னைக் காப்பாற்றுவதற்கு இவ்வளவு அவசரப்பட்டிருக்க மாட்டீங்க என்றார். காப்பாற்றினவர் அறிவிப்புப்பலகையை மறுபடியும் பார்த்தார். அதிலே என்ன எழுதியிருந்தது தெரியுமா?

நீந்தத் தெரியாமல் தத்தளிக்கிறவர்களை காப்பாற்றி கரை சேர்க்கிறவர்களுக்கு 100 ரூபாய் அன்பளிப்பு. சடலத்தை வெளியே இழுத்துப் போடுகிறவர்களுக்கு 200 ரூபாய் அன்பளிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு-செலவு திட்டம் ஊடாக முல்லைத்தீவுக்கு ரூ.115 மில்லியன் ஒதுக்கீடு

## நிதியினை கையாள்வது தொடர்பில் விசேட கலந்துரையாடல்

(நெளுக்குளம்)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் ஊடாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 115 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் விசேட கூட்டம் நேற்று காலை 11.30 இற்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் முல்லை. மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் காதர் மஸ்தான் பங்கு பற்றுதலுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

நிரல் அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பிற நிறுவனங்களினால் நிதி ஒதுக்கப்படாத பொருளாதார, சமூக, சமய மற்றும் கலாசார நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்குத் தேவையான பௌதீக உட்கட்டமைப்பை உருவாக்குதல் அல்லது சமூக நலனை இலக்காக கொண்ட கருத்திட்டங்களிற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை முறையாக முதலீடு செய்தலை உறுதிப்படுத்தும் வகையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

கல்வி, சுகாதாரம், விவசாய, கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-5-6-299)

# ஆக்கிரமிப்பில் இருந்த வீதி வவுனியா நகரசபையால் மீட்பு

(குருமன்காடு)

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தனிநபரின் ஆக்கிரமிப்பில் இருந்த வீதி ஒன்று வவுனியா நகரசபையால் மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் நகர சபை செயலாளர் இ.தயாபரன் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

வவுனியா, திருநாவற்குளம், கிராம அபிவிருத்திச் சங்க வீதியின் இரண்டாம் ஒழுங்கையின் ஒரு பகுதி தனிநபர் ஒருவரினால் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வழிமறிக்கப்பட்டு கொட்டகை அமைத்து ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நகரசபைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் வவுனியா நகர சபையின் செயலாளரால் குறித்த தனிநபருக்கு அறிவித்தல் வழங்கியும் அந்நபரால் குறித்த வீதி பொதுமக்கள் பாவனைக்கு வழங்கப்படவில்லை. இதனை தொடர்ந்து நகரசபையினர் அதிரடியாக செயற்பட்டு பொலிசாரின் துணையுடன் குறித்த வீதியில் தனிநபரால் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கொட்டகையை அகற்றி அக்கொட்டகையினை நகர சபையினர் கையகப்படுத்தி உள்ளதுடன் குறித்த தனிநபருக்கு எதிராக வழக்கு தாக்கலும் செய்யப்பட்டுள்ளது. (நி-5-6-250)

# கிளி.மாவட்ட அரச அதிபரை சந்தித்த மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க



(தருமபுரம்)

புதிதாக பதவியேற்ற யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜென்ரல் சந்தன விக்கிரமசிங்க கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.

மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் பொதுவான பல விடயங்கள் தொடர்பிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் நிலை மற்றும் மாவட்டத்திலுள்ள பாதுகாப்பு படைகள் வழங்குகின்ற ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டிருந்தது.

சந்திப்பின் இறுதியில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதியினால் நினைவுப் பரிசிலும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-316)




## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3028

தர்சன்




வாகினி




சருமி




வேணுயா




மதுரா




சாருஜன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 393





பைப் போன்ற பேரிரைச்சல் ஒன்று கேட்டது. வந்தியத்தேவன் இரைச்சல் வந்த திக்கைத் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் ஒரு பெரிய சேனா சமுத்திரத்தைப் போன்ற பெருங் கூட்டம், வீதிகளில் முடிவில்லாது நீண்டு போய்க் கொண்டிருந்த ஜனக் கூட்டம் வருவது தெரிந்தது. அந்த ஜன சமுத்திரத்தின் நடுவே கரிய பெரிய திமிங்கலங்கள் போல் நூற்றுக்கணக்கில் யானைகள் காணப்பட்டன. கடல் நீரில் பிரதிபலிக்கும் விண்மீன்களைப் போல் ஆயிரம் ஆயிரம் தீவர்த்திகள் ஒளி வீசின. ஜனங்களோ லட்சக் கணக்கில் இருந்தார்கள்.

வந்தியத்தேவன், "இது என்ன? பகைவர்களின் படை எடுப்பைப்போல் அல்லவா இருக்கிறது?" என்றான்.

"இல்லை, இல்லை! இது தான் இந்த இலங்கை நாட்டிலேயே மிகப்பெரிய உற்சவமாகிய பெரஹறாத் திருவிழா!" என்றார் இளவரசர்.

ஊர்வலம் நெருங்கி வரவர வந்தியத்தேவனுடைய வியப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. அந்த மாதிரி காட்சியை அவன் தன் வாழ்நாளில் பார்த்ததில்லை.

முதலில் சுமார் முப்பது யானைகள் அணிவகுத்து வந்தன. அவ்வளவும் தங்க முக படாங்களினால் அலங்கரிக்கப்பட்ட யானைகள். அவற்றில் நடுநாயகமாக வந்த யானை எல்லாவற்றிலும் கம்பீரமாக இருந்ததுடன், அலங்காரத்திலும் சிறந்து விளங்கியது. அதன் முதுகில் நவரத்தினங்கள் இழைத்த தங்கப் பெட்டி ஒன்று இருந்தது. அதன்மேல் ஒரு தங்கக் குடை கவிந்திருந்தது. நடுநாயகமான இந்த யானையைச் சுற்றியிருந்த யானைகளின் மீது புத்த பிக்குக்கள் பலர் அமர்ந்து வெள்ளிப் பிடிபோட்ட வெண் சாமரங்களை வீசிக்கொண்டிருந்தார்கள். யானைகளுக்கு இடையிடையே குத்து விளக்குகளையும், தீவர்த்திகளையும், இன்னும் பலவித வேலைப் பாடமைந்த தீவர்த்திகளையும், தீபங்களையும் ஏந்திக் கொண்டு பலர் வந்தார்கள். கரிய குன்றுகளை யொத்த யானைகளின் தங்க முகபடாங்களும் மற்ற ஆபரணங்களும் பிக்குகளின் கைகளில் இருந்த அந்த வெண் சாமரங்களும் பல தீபங்களின் ஒளியில் தகதகவென்று பிரகாசித்துக் கண்களைப் பறித்தன.

யானைகளுக்குப் பின்னால் ஒரு பெரும் ஜனக் கூட்டம். அந்தக் கூட்டத்தின் மத்தியில் சுமார் நூறு பேர் விசித்திரமான உடைகளையும், ஆபரணங்களையும் தரித்து நடனமாடிக் கொண்டு வந்தார்கள். அவர்களில் பலர் உடுக்கையைப் போன்ற வாத்தியங்களை தட்டிக் கொண்டு ஆடினார்கள். இன்னும் பல வகை வாத்தியங்களும் முழங்கின. அப்பப்பா! ஆட்டமாவது ஆட்டம்! கடம்பூர் அரண்மனையில் தேவராளனும், தேவராட்டியும் ஆடிய வெறியாட்ட மெல்லாம் இதற்கு முன்னால் எங்கே நிற்கும்! சிற்சில சமயம் அந்த ஆட்டக்காரர்கள் விர்ரென்று வானில் எழும்பிச் சக்கராகாரமாக இரண்டு மூன்று தடவை சுழன்று விட்டுத் தரைக்கு வந்தார்கள். அப்படி அவர்கள் சுழன்ற போது அவர்கள் இடையில் குஞ்சம் குஞ்சமாகத் தொங்கிக் கொண்டிருந்த துணி மடிப்புகள் பூச்சக்கரக் குடைகளைப் போலச் சுழன்றன. இவ்விதம் நூறு பேர் சேர்ந்தாற்போல் எழும்பிச் சுழன்றுவிட்டுக் கீழே குதித்த காட்சியைக் காண்பதற்கு இரண்டு கண்கள் போதவில்லை தான்! இரண்டாயிரம் கண்களாவது குறைந்த பட்சம் வேண்டும்.

"எதற்காக இவ்வளவு பெரிய கட்டிடங்களைக் கட்டினார்கள்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"முதன் முதலில், புத்தர் எவ்வளவு பெரியவர் என்பதை ஜனங்களுக்கு உணர்த்துவதற்காக இவ்வளவு பெரிய சின்னங்களை நிர்மாணித்தார்கள். பின்னால் வந்த அரசர்களோ தாங்கள் எவ்வளவு பெரியவர்கள் என்பதைக் காட்டுவதற்காக முன்னால் கட்டியிருந்த ஸ்தூபங்களைக் காட்டிலும் பெரிதாகக் கட்டினார்கள்!" என்றார் இளவரசர்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சமுத்திரத்தின் கொந்தளிப்

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பூனை,சேவல்,எலி



ஒரு தோட்டத்துல இருக்குற வீட்டுல ஒரு எலி இருந்துச்சு.

அந்த எலிக்கு ஒரு குட்டி எலி பிறந்துச்சு, பிறந்து கொஞ்ச நாளே ஆன அந்த குட்டி எலி அம்மாகிட்ட சொல்லாம ஊர் சுத்த போச்சு.

அந்த எலி அதுவரைக்கு மத்த மிருகங்களையோ, வெளி உலகத்தையோ பார்த்தது இல்லை,

அப்படி ஊர்சுத்த போன குட்டி எலி சாயந்திரம் திரும்பி வந்துச்சு. அந்த எலியோட அம்மா ரொம்ப கோபப்பட்டு இன்னைக்கு என்ன என்ன நடந்துச்சுனு கேட்டாங்க.

அதுக்கு அந்த குட்டி எலி ஒரு மிக பெரிய ராட்சசனையும், ஒரு கனிவான சாதுவையும் சந்திச்சேனு சொல்லுச்சு.

அந்த எலி தொடர்ந்து சொல்லுச்சு, நான் வெளியில போனதும் அவுங்க ரெண்டு பேரும் நின்னுகிட்டு இருந்தாங்க.

அந்த ராட்சசன் கலர் தொகைகளோட, கூரிய நகங்களோட இருந்தான், கொக்கரக்கோ கொக்கரக் கோனு பயங்கரமா கூவிகிட்டே இருந்தான்

பக்கத்துல அந்த சாது இருந்தாரு, வெண்மை நிறத்துல உடல் முழுசும் வெல்வட் போல மெது மெது தோலோட, குட்டியா அழகான வாலோட இருந்தாரு.

நான் அவர் கிட்ட போயி நட்பு வச்சிக்கிடலாம்னு கிட்ட போனேன், அப்ப அந்த ராட்சசன் வந்து கொக்கரக்கோனு கூவி எல்லாத்தையும் கெடுத்துட்டான்.

நான் பயந்து போயி இங்க ஓடி வந்துட்டேனு சொல்லுச்சு.

அப்பத்தான் அந்த அம்மா எலிக்கு தன்னோட குட்டி எலி யாரை சந்திச்சுச்சு, யார் அந்த ராட்சசன், யார் அந்த சாதுனு எல்லாம் புரிஞ்சிச்சு.

அந்த அம்மா எலி தன்னோட குட்டி கிட்ட சொல்லுச்சு, நீ பார்த்து சாதுனு சொல்லுற உயிரினத்துக்கு பேரு பூனை, நம்மள மாதிரி எலிகளை திங்கிறதுதான் அதோட வேலை, அதோட தோற்றத்தை வச்சு அது சாதுனு நம்புறது தப்பு.

அதே நேரத்துல அந்த பூனை உன்ன திங்க விடாம செய்ய கொக்கரக்கோனு கத்தி உன்ன காப்பாத்துன உயிரனம் பேரு சேவல்.

எப்போதும் உருவத்த வச்சு ஒருத்தரோட குணத்தை எடை போட கூடாதுனு சொல்லி புரிய வச்சுச்சு அந்த அம்மா எலி.

நீதி :-வெளித்தோற்றத்தை மட்டும் நம்பாதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது
ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குருசேத்திரப் போரில் முதற்களப் பலியான வீஷ்மர்

மகா பாரதத்தில் வீஷ்மர் மிகவும் உன்னதமான கதாபாத்திரம்.

பிதாமகர் என்று போற்றப்பட்டவர். இருந்தும் குருசேத்திரப் போரில் கௌரவர் சேனையின் தளபதியாக இருந்த வீஷ்மரே முதலில் களப் பலியாகிப் போனார்.

நீதியை எடுத்துரைக்க வல்லவர். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் வில்வித்தையைப் பயிற்றுவித்தவர். பாரத பூமியை ஆளுகின்ற உரிமைக்குரியவர்.

இவ்வாறாக உன்னதமான வகிபங்கைக் கொண்ட வீஷ்மர்; குருசேத்திரப் போரில் முதலில் பலியாகிப் போவதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தால் அங்குதான் வீஷ்மர் விட்ட தவறு தெரியவரும்.

ஆம், கௌரவர் சபை கூடுகிறது. வீஷ்மர், துரோணர் உள்ளிட்டவர்கள் அச்சபைதனில் வீற்றிருக்கின்றனர்.

ஏலவே சூதாட்டத்தில் திரௌபதியை வென்ற துரியோதனன், திரௌபதியை சபைக்கு அழைத்து வரப் பணிக்கின்றான்.

அதுமட்டுமல்ல, ஒரு பெண்ணை எந்தளவுக்கு மானபங்கப்படுத்தக்கூடாதோ அந்தளவுக்கு திரௌபதி அச்சபைதனில் மானப்பங்கப்படுத்தப்படுகிறாள்.

அந்தோ கொடுமை துச்சாதனன் எனும் கொடியவன் திரௌபதியின் துகிலை உரிகிறான். இக்கொடுஞ்செயல் நடந்துற்றபோதும் வீஷ்மர் மௌனமாகவே இருக்கின்றார்.

இங்குதான் வீஷ்மர் தவறிழைக்கிறார். ஆம், அறத்தை, நீதியை எடுத்துரைக்க வேண்டியவர். அவர் கூறினால் சபை கேட்கும் எனும் மதிப்புக்குரியவர். இத்தகு தகைமைப்பாடுகள் இருந்தும் திரௌபதியின் துகிலை களைகின்றபோது, துச்சாதனா! நிறுத்து. யாது செய்ய விளைந்தனை.

இக்கொடுஞ் செயலைச் செய்வதுதான் உங்கள் ஆட்சித் திறனா என்று கேட்க வேண்டிய வீஷ்மர் மௌனித்திருந்தார்.

அந்த மௌனம்தான் அவருக்கான மரணத்தைத் தீர்மானித்தது.

அதோ! தர்மத்தை நிலைநாட்ட வலம்புரிச் சங்கு ஒலிக்கிறது. குருசேத்திரப் போர் தொடங்குகிறது. வீஷ்மர் கௌரவர்களுக்காக தலைமைத் தளபதியாகப் போரிடுகிறார்.

அழிக்கப்பட வேண்டியவர்களின் பக்கமாக வீஷ்மர் போராடுவதே அவரின் அறியாமையும் துணிந்து கருத்துரைக்கத் தெரியாமையும் என்பது புரிகிறது.

எழுதப்பட்ட விதிபோல போர்க்களத்தில் சிகண்டி என்பான் வீஷ்மர் முன்நிற்கிறான். வீஷ்மர் தன் ஆயுதங்கள் அனைத்தையும் கீழே போடுகிறார்.

பிதாமகர் என்று போற்றப்பட்ட அப்பெருமகன் கதைக்க வேண்டிய நேரத்தில் கதைக்க மறந்ததால் – மறுத்ததால் பாவத்தின் சன்மானமாக மரணம் விளைகிறது.

வீஷ்மரின் சம்பவம் வெறும் இதிகாசத்துக் கதை என்று யாரும் நினைத்துவிடாதீர்கள்.

இது உலகில் நடக்கும் என்பதையே வீஷ்மர் மூலமாக மகாபாரத இதிகாசம் நமக்கு எடுத்துக் கூறுகிறது.

ஆக, எடுத்துரைக்க வேண்டிய அறத்தை எடுத்துக்கூறாமல் மௌனித்தால், அதுவே மாரகமாக வந்துறும். கவனம்.

# பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தால் சாந்தனை இலங்கை அழைத்துவர முடியும்

## சிறீதரனிடம் துணைத்தூதுவராலயம் எடுத்துரைப்பு

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் சாந்தனை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கமுடியும் என சென்னையில் அமைந்துள்ள இலங்கையின் துணைத்தவராலயம் தன்னிடம் தெரிவித்ததாக தமிழரசுக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

இந்தியாவிலுள்ள சாந்தனை இலங்கைக்கு அழைத்து வரும் விடயம் தொடர்பில் இன்றைய தினம்(நேற்று) வெளி விவகார அமைச்சர் அலிசப்ரியுடன் பேசினேன். சாந்தனை இலங்கை அழைத்துவர வெளிவிவகார அமைச்சினாலான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்தின் துணைத் தூதரான வெங்கட் அவர்களோடு நான் தொலைபேசியில் பேசினேன்.

அநேகமாக இரண்டு மூன்று நாட்களுக்குள் அந்த விடயம் சரிவரும் அத்தோடு இந்திய தூதரகத்தால் சில ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன அந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுமிடத்தில் அந்த விடயம் சாத்தியமாகும்.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சினுடைய சில உறுதிப்படுத்தலுக்காக காத்திருப்பதாகவும் உறுதிபடுத்தல் கிடைத்தவுடன் சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார் என்றார்.(ம-7)

# குறுகிய அரசியல் நோக்கின்றி பொறுப்புடன் செயற்படுங்கள்

## எதிர்க்கட்சிக்கு ஐ.தே.க ஆலோசனை

இந்த வருடத்தில் பொருளாதார ரீதியில் நாட்டை ஸ்திரப்படுத்த தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவரும் போது அதனை குழப்புவதற்கே ஐக்கிய மக்கள் சக்தி ஆர்ப்பாட்டம் மேற்கொண்டு வருகிறது. பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சி என்றால் ஒருபோதும் இந்த சந்தர்ப்பத்தில் ஆர்ப்பாட்டம் செய்திருக்க மாட்டார்கள் என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், 2024ஆம் ஆண்டு நாடு பொருளாதார ரீதியில் முன்னேறிச் செல்லும் வருடம். அதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை சகித்துக்கொள்ளாத எதிர்க்கட்சி தங்களின் வங்குரோத்து நிலையை மறைப்பதற்காக குறுகிய அரசியல் நோக்கில் மக்களை தூண்டி பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியுமான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அதன் ஓர் அங்கமாகவே கொழும்பில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அத்துடன் உலகில் பல நாடுகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருந்த போது, அந்த நாடுகளின் எதிர்க்கட்சிகள் தங்களின் நாட்டை பாதுகாத்துக் கொள்ள அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியதன் மூலம் அந்த நாடுகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. அதே போன்று கிறீஸ், ஆஜன்டீனா போன்ற நாடுகள் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்நாட்டு எதிர்க்கட்சிகள் அதனை பயன்படுத்திக் கொண்டு அரசியல் லாபம் தேட முற்பட்டதால் இன்னும் அந்த நாடுகள் வீழ்ச்சியடைந்தே இருக்கின்றன. அதனால் அந்த நாடுகளின் நிலைக்கு இலங்கை செல்லாமல் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்ததால் குறுகிய காலத்திலேயே எமக்கு பொருளாதார நெருக்கடியில் இருந்து ஓரளவு மீள முடியுமாக இருக்கிறது.

எனவே பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்றால், தற்போதைய நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கத்துக்கு தேவையான ஆதரவை வழங்க வேண்டும். ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவும் உரிமைகளுக்காக போராட்டம் மேற்கெள்ளவும் அனைவருக்கும் உரிமை இருக்கிறது. ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

அதேநேரம் வேலை நாளான நேற்றைய தினம் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் மக்களை கஷ்டத்துக்கு உள்ளாக்கி கொழும்பில் இவ்வாறு ஆர்ப்பட்டம் மேற்கொள்ள எடுத்த நடவடிக்கையை ஒருபோதும் அனுமதிக்க முடியாது பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்றால் இந்த வேலையை செய்திருக்க மாட்டார்கள் என்றார்.(ம-7)

# மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

## கந்தளாயில் சம்பவம்

(கந்தளாய்)

திருகோணமலை - கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தளாய் குளத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி மாலை மீன்பிடிக்க சென்ற நிலையில் நேற்று அதிகாலை குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வெவசிரி கம என்ற பிரதேசத்தை சேர்ந்த 40 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், உயிரிழந்தவர் கடந்த 28 ஆம் திகதி மாலை மூன்று மணியளவில் கந்தளாய் குளத்திற்கு தனியாக மீன்பிடிக்க சென்ற நிலையில் மறுநாள் காலை வரை வீடு திரும்பிருக்கவில்லை.

இந்நிலையில் உறவினர்களால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாட்டை அடுத்து, பொலிஸாரும் பொது மக்களும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில், நேற்று அதிகாலை குளத்தின் கரையில் இருந்து 100 மீற்றர் தொலைவில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# மின் கட்டணம் செலுத்த புதிய முறைகள் அறிமுகம்

மின்சார பாவனையாளர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதற்கு இலங்கை மின்சார சபை பல புதிய முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, மின்சார சபையின் CEBCare விண்ணப்பம், online வங்கி சேவைகள், CEB இணையத்தளம், தபால் அலுவலகம், CEB மற்றும் வங்கி KIOSK இயந்திரங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் மூலமும் கட்டண பணத்தினை செலுத்த முடியும்.

மேலும், மின்சார கட்டணம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் விசாரணைகளுக்கும் CEB துரித இலக்கமான 1987 இற்கு தொடர்புகொள்ளுமாறு இலங்கை மின்சாரசபை நுகர்வோரை கேட்டுக் கொண்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III


கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


12

இன்று இலங்கையிலே பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கர் பெருகியிருப்பதற்கு இவர்களின் முயற்சியே காரணம். கத்தோலிக்க குருமார் போர்த்துக்கேய அதிகாரிகளின் கொடுங்கோலாட்சியை அக்காலத்தில் எதிர்த்து நின்றனர். கேயிரோஸ் சுவாமியார் என்ற குருவானவர் தமது நூலில் எவ்வாறு போர்த்துக்கேய ஆட்சியை ஆணித்தரமாகக் கண்டித்திருக்கிறார் என்பது அந்நூலை வாசிப்பவர்க்கு நன்கு விளங்கும்.

போர்த்துக்கேய குருமார் தம் கோயிற்பற்றுக்களில் (கட்டளைகளில்) உள்ள கத்தோலிக்கப் பிள்ளைகள் கல்வி கற்பதற்காக ஒவ்வோர் கோயிற்பற்றுக்களிலும் பாடசாலைகளை ஏற்படுத்தி "அஞ்ஞானிகளை" மனந்திருப்பத் தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் செய்தனர். சிங்களத்திலும் தமிழிலும் ஒரு நவ இலக்கியம் தோன்றவும் அவர்கள் துணையாக இருந்தனர். கத்தோலிக்க மத சம்பந்தமான இலக்கியமே அது. வாஸ்,கொன்ஸால்வெஸ் என்ற இரு குருமாரும் இயற்றிய கத்தோலிக்க மத சம்பந்தமான சிங்கள நூல்கள் இன்றும் கத்தோலிக்கரால் உச்சி மேல் வைத்துப் போற்றப்படுகின்றன.

கொழும்பிலே யேசுச் சபையார் ஓர் உயர்தர கலாசாலையை வைத்து நடத்தினர். ஆரம்பப் பிரிவு, சிரேஷ்ட பிரிவு, அதி சிரேஷ்ட பிரிவு என்னும் முப்பிரிவுகளை அக் கலாசாலை கொண்டிருந்தது. ஆரம்பப் பிரிவில் வாசிப்பு எழுத்து, எண், சிங்களம், லத்தீன் என்பன போதிக்கப் பட்டன. சிரேஷ்ட பிரிவில் இலக்கணம், காவியம், மனிதத்தத்துவம் என்பனவும் அதிசிரேஷ்ட பிரிவில் ஒழுக்க ஞானமும் போதிக்கப்பட்டன. இக்கலாசாலையில் லத்தீன் பாஷை படித்துப் பாண்டித்தியம் பெற்றவர்தான் அழகியவண்ணன் என்ற பிரபல சிங்களக் கவிஞர்.

இக்கலாசாலை தன்னிடம் கல்வி கற்ற மாணவர்களைச் சிலாகித்து அப்பாடசாலையின் அறிக்கை ஒன்று பின்வரும் கருத்துப்படக் கூறுகிறது:- "இலங்கை மாணவர்கள் தமக்கு ஊட்டப்படும் பாடங்களைச் சுலபத்திற் கிரகிக்கும் சக்தியும் புத்திக் கூர்மையும் உள்ளவர்கள். ஐரோப்பியர் ஒரு வருடகாலம் படித்து லத்தீன், ஞான நூல்கள், விஞ்ஞான சாத்திரம் என்பவற்றிற் பெறும் அறிவைப் பார்க்கிலும் கூடிய அறிவை இம்மாணவர்கள் ஆறே ஆறு மாதத்தில் குறித்த அதே பாடங்களைப் படித்துப் பெற்றுவிடுகிறார்கள்."கொழும்புக் கலாசாலையில் 150 மாணவர்கள் படித்தனர்.

அதற்கு வேண்டிய வருவாய் மொறட்டுவ, கோகிலவத்தை, முன்னேஸ்வரம் என்னும் இடங்களில் இருந்து பெறப்பட்டது. கத்தோலிக்க குருமார்கள் மத சம்பந்தமான, தத்துவார்த்த நாடகங்களையும் தோற்றுவித்து கம்மல, மாதம்பை, சிலாபம் என்னும் இடங்களில் நடிப்பித்துக் காட்டினர். சமுதாய வாழ்க்கையிலும், சிங்களர் தமது எஜமானரான போர்த்துக்கேய பழக்க வழக்கங்கள் சிலவற்றைக் கையாண்டனர்.

கரையோரப் பகுதிகளில் வசித்த பலர் போர்த்துக்கேய உடைகளைத் தாமும் கைக்கொள்ளத் தொடங்கினர். இப்போது சிங்களத்திலும் தமிழிலும் வழங்கி வரும் தொப்பி, கமிசை,சப்பாத்து,அலவாங்கு, அலுமாரி, கோப்பை,பாண், மேசை, துவாய்,கடுதாசி,வாங்கு போன்ற சொற்கள் போர்த்துக்கேய சொற்களே. இன்னும் சில சுதேசிகளானவர்கள் பெரேரா,சில்வா,றொட்றிகோ, அல்மெய்தா, சல்காது முதலான போர்த்துக்கேய பெயர்களைத் தமக்கு இட்டுக்கொண்டனர்.(நன்றி "இலங்கைச் சரித்திரமும் உலகைச் சரித்திரமும்- எஸ்.எவ்.டி.சில்வா)

### போர்த்துக்கேயர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குத்திகள்

### மலாக்கா நாணயக்குத்திகள்

மலாக்கா நாணயங்களின் ஒரு பக்கத்தில் போர்த்துக்கேய அரச சின்னமும் அதன் இரு புறத்திலும் AM அல்லது MA அல்லது DM என்ற எழுத்துக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. AM எழுத்துக்களின் சுருக்கம் ஆசிய மலாக்கா என்பதே கருதப்பட்டுள்ளது. அதேபோன்று MA மற்றும் DM எழுத்துக்களின் மூலம் மலாக்கா என்று கருதப்பட்டுள்ளது. நாணயத்தின் மறு பக்கத்தில் "தங்கம்" என்பதைக் காட்டுவதற்காக A மற்றும் T என்ற ஒரு சோடி எழுத்துக்கள் ஒன்றின் மீது ஒன்று அமையக்கூடிய விதத்தில் அமைந்துள்ளதைக் காணலாம். அதேபோன்று நாணயத்தின் அதே பக்கத்தில் அதனை வெளியிட்ட ஆண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர்த்துக்கேயர் இந்த நாணய வகையை இலங்கையில் பயன்படுத்துவதற்காகவென்றே கோவாவில் தயாரித்துள்ளனர். ஆதலால் நாணயத்தின் ஒரு பக்கத்தில் போர்த்துக்கேய அரச இலச்சினையும் அதன் இரு புறத்திலும் GA என்ற இரண்டு எழுத்துக்களும் மறுபக்கத்தில் DS என்ற இரண்டு எழுத்துக்களும் ஒன்றன் மீது ஒன்று அமையக்கூடிய விதத்தில் அமைந்துள்ளதைக் காணலாம்.இதில் DS என்று குறிப்பிடப்பட்டுள்ளது இலங்கையில் பயன்படுத்தப்பட்ட "டிசெலா" என்ற சொல்லின் சுருக்கமாகும்.

### கினி மஸ்ஸவா நாணயக் குத்திகள்

கினி மெஸ்ஸ நாணயத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்ற அநேகமானவர்கள் அதனை கினி மஸ்ஸ என்றே அழைக்கின்றனர். ஆயினும் நாணயத்தின் ஒரு பக்கத்தில் காணப்படுகின்ற கினி மெஸ்ஸ எனப்படும் தீ தட்டு காரணமாக அதனை கினி மெஸ்ஸ என்றே குறிப்பிடுதல் வேண்டும். போர்த்துக்கேயர்கள் கி.பி. 1505இல் இந்நாட்டில் காலடியெடுத்து வைத்து, திரும்பிச் செல்வதற்கு முன்னர் கொழும்பில் சிறியதொரு கோட்டையைக் கட்டி அதனை புனிதர் லோரன்ஸின் பெயரில் அர்ப்பணித்துள்ளனர்.

அந்தப் புனிதர் தீ தட்டு ஒன்றின் (கினி மெஸ்ஸ) மீது தீயில் எரிந்தே இறந்துள்ளார். இந்த சம்பவத்தை நினைவுகூரும் முகமாகவே கினி மெஸ்ஸ நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆதலால் இந்த நாணயம் மேலைத்தேயத்தவர்கள் இந்நாட்டில் வெளியிட்ட முதலாவது ஞாபகார்த்த நாணயமாக இருக்கலாம். கினி மெஸ்ஸ நாணயம் 1640 இல் "தங்கம்" நாணயமாகவும் 1675இல் "துவி தங்கம்" நாணயமாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

### புனிதர் நாணயங்கள்

புனிதர் நாணயத் தொகுதியின் ஒரு பக்கத்தில் போர்த்துக்கல் அரச இலச்சினையும் அதன் இரு புறத்திலும் GA என்ற எழுத்துக்களும் மறு பக்கத்தில் புனிதர் ஒருவரின் உருவப்படமும் நாணயம் வெளியிடப்பட்ட ஆண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று எந்தப் புனிதர் அதில் பொறிக்கப்பட்டுள்ளார் என்பதைக் காட்டுவதற்கு உருவப்படத்தின் இருபுறமும் ST மற்றும் SF ஆகிய எழுத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் புனித தோமஸ், புனித பிலிப் ஆகிய புனிதர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

போர்த்துக்கேய ஆட்சிக் காலத்தில் இந்த நாணயங்களுக்கு மேலதிகமாக "குருசாடோ", "சக்ரம்", "பணம்", "லாரின்ஸ்" ஆகிய வேறு நாணய வகைகளும் இந்தியாவில் போன்று தங்க "பகோடி", தங்க "பணம்" மற்றும் வெள்ளி "பணம்" ஆகியனவும் கொடுக்கல் வாங்கலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

போர்த்துக்கேய ஆட்சிக் காலத்தில் பாவனையில் இருந்த சில நாணயங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.

### ஒல்லாந்தர் கீழைத்தேய நாடுகளுக்கு வருகை

ஐரோப்பாவிலே ஸ்பெயின் சாம்ராச்சியத்தின் ஓர் பகுதியாக ஒல்லாந்து விளங்கியது. இந்நாடு சீருஞ் சிறப்பு முற்றுப் பொருள்வளத்திலும், வியாபாரத்துறையிலும், தொழில் அபிவிருத்தியிலும் மேம்பட்டிருந்தது. ஒல்லாந்து தேசத்தைத் தாழ்ந்த தேசமென்று சொல்வர். ஏனெனில் இது கடல் நீர்மட்டத்துக்குக் கீழாக அமைந்துள்ளது.

கடல்நீர் இந் நாட்டுக்குள் நுழைந்து மக்களுக்குச் சேதம்விளை விக்காதவாறு பெரும் அணைகளைக் கட்டி கடல் நீரைத் தடுத்து வருகிறார்கள். ஒல்லாந்து தேசத்தில் வாழ்பவரே டச்சுக்காரர் என்றும் வழங்கப்படுவர். 17ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்து தேசம் பொருள் வளத்தால் மட்டுமன்றிக் கலை வளத்திலும் மகோன்னத நிலையெய்தியிருந்தது. பேர்பெற்ற விஞ்ஞானிகளும், சட்ட நிபுணர்களும், வலிமை மிக்க எழுத்தாளர்களும் தத்துவ ஞானிகளும் ஓவியர்களும் சிற்பிகளும் அங்கு மலிந்திருந்தனர்.

ஸ்பெயின் சாம்ராச்சிய அரசனாக அக்காலத்தில் விளங்கியவன் இரண்டாம் பிலிப்பு என்பவன் ஆவான். இவன் அறநெறி தவறிச் செங்கோலோச்சி வந்தான். மக்களை வாட்டிக் கொடுங்கோன்மை புரிந்தான். அவன் ஆட்சியை எதிர்த்து ஒல்லாந்தர் கலகம் விளைவித்தனர். இதற்குக் காரணங்களில்லாமலில்லை. இதுகாறும் ஒல்லாந்து தேச மாகாணங்கள் ஒல்லாந்து தேசப் பிரபுக்களாலேயே ஆளப்பட்டு வந்தன. ஆனால் பிலிப்பு பேரரசனாகச் சிம்மாசனம் ஏறியதும் ஒல்லாந்துப் பிரபுக்களை நீக்கி விட்டு ஸ்பெயின் நாட்டவரை ஒல்லாந்துதேச மாகாணங்களைப் பரிபாலிப்பதற்கு நியமித்தான்.

அன்றியும் ஸ்பெயின் நாட்டுப் பேரரசனும் குடிகளும் கத்தோலிக்க கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒல்லாந்து தேசத்தவரோ புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியவர்கள். ஆகவே கத்தோலிக்கனாகிய பிலிப்பு புரட்டஸ்தாந்தராகிய ஒல்லாந்தரிடம் பகைமை பாராட்டி அவர்களை வெறுத்துக் கடும் வரிகளை விதித்து இம்சித்து வந்தான்.

இவ்விரு வகையிலும் துன்புற்ற ஒல்லாந்தர் யுத்தம் செய்ய ஆரம்பித்தனர். ஒறேஞ் வம்சத்து வில்லியம் என்பவனின் தலைமையில் ஸ்பெயின் சாம்ராச்சியத்துப் பேரரசனுடன் போர்செய்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் பெண்...

பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணை காணவில்லை என வீட்டார் தேடியபோது வீட்டிலுள்ள கிணற்றில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

29 வயதுடைய ஜெனிற்றா சயந்தன் என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மரணம் தற்கொலையா? அல்லது எதிர்பாராது இடம்பெற்றதா? அல்லது கொலையா? என பல்வேறு கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## புதிய வாகன...

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, கல்வி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அந்நியச் செலாவணி சந்தையில் ஏற்பட்டுள்ள அழுத்தத்தைக் குறைக்கும் நடவடிக்கையாக, கட்டுமான வாகனங்கள்மற்றும் அம்புலன்ஸ்கள் தவிர்ந்த வாகனங்களின் இறக்குமதியை அரசாங்கம் தற்காலிகமாக இடைநிறுத்தியது.

இந்நிலையில், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன நிதி அமைச்சிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்க கடந்த டிசம்பர் மாதம் அமைச்சரவை தீர்மானித்தது.

இதற்கமைய, 2366/19 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 11ஆம் திகதி வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## காற்றாலை...

இந்நிலையில் குறித்த மின்னுற்பத்தித் திட்டம் எதிர்வரும் காலங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ம-7)

## ரணில் - ராஜ...

அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, கொழும்பு விகாரமகாதேவி பூங்கா பிரதான நுழைவாயில் முன்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல் மூலமே நாம் ஆட்சிக்கு வருவோம். தற்போதைய அரசாங்கத்திற்கு முதுகெலும்பு இல்லை. அவ்வாறு முதுகெலும்பு இருந்தால் தேர்தல் ஒன்றை நடத்துங்கள். எங்களிடம் டீல் இல்லை.

நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பித்த பாதைகளில் நாங்கள் பேரணி நடத்தவில்லை. நாம் சட்டத்தை மீறி செயற்படவில்லை. வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம், எங்களுக்குத் தேர்தலே வேண்டும்.

அரசியல் ரீதியிலான டீல்கள் மூலம் அன்றி மக்கள் அனுமதியுடனேயே ஆட்சிக்கு வருவோம். மக்கள் ஆசீர்வாதத்தின் ஊடாகவே நாம் ஆட்சிக்கு வருவோம் என்பதை இந்த ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்திடம் கூறுகிறோம்.

ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் மக்கள் வெள்ளத்திற்கு பயந்துவிட்டனர். இது கோழைத்தனமான அரசாங்கமாகும். இது முதுகெலும்பு இல்லாத அரசாங்கம். மக்களுக்கு பயந்த அரசாங்கம், இன்று (நேற்று) காலை ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தின் சில கைப்பொம்மைகள் நீதிமன்றம் சென்று, சில பிரதேசங்களுக்கு தடையுத்தரவு களை கோரினர்.

ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்தில் ரணிலுக்கும் மகிந்தவிற்கும் முதுகெலும்பு இருந்தால் மக்கள் மத்தியில் வருமாறு அழைப்பு விடுக்கிறோம் என்றார். (ம-7)

## வலிகாமம்...

அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.

இதற்கமைய ஏற்கெனவே மக்களிடம் கையளிக்கப்பட்ட குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன், கட்டுவன் மேற்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய வகையிலேயே இந்த 500 ஏக்கரை சுவீகரிக்க இரகசிய முயற்சி இடம்பெறுகின்றது.

விமானப் போக்குவரத்து அதிகார சபை ஊடாக நில அளவைத் திணைக்களத்திடம் சமர்ப்பித்த வரைபடம் சகிதம் சுவீகரிக்க முயற்சிக்கும் பகுதிகளின் கிராமசேவகர்களும் இதன் போது அப்பகுதிகளை நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றதனால் அப் பகுதி மக்கள் பெரும் குழப்பமடைந்துள்ளனர்.

வலி. வடக்கில் ஏற்கனவே படையினரிடம் மூவாயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. இதனை விடுவிக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைத்தபோதும் மௌனம் காக்கும் அரசு தற்போது இந்த இரகசிய முயற்சியில் ஈடுபடுகின்றமை அம்பலமாகியுள்ளது. (ம-7,33)

## மானிப்பாய்...

திங்கட்கிழமை இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் குழுவாக நின்றவர்களை சோதனையிட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் முயன்றுள்ளனர்.

இதன்போதே பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. தாக்குதல் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் ஐந்து பேர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம்தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## இளம்...

என்ற இளம்குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

அயல்வீட்டுக்காரர்களான உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் கொலையில் முடிந்துள்ளது.

வாய்த்தகராறு முற்றி கைகலப்பு ஏற்பட்டபோது, ஒருவர் கொட்டனால் தாக்க முற்பட்டபோது, மற்றையவர் கத்தியால் குத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

57 வயதான சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,33)


## எரிந்...

இடமாகக் கொண்ட வரப்பிரசாதம் ரெபேக்கா ரத்தினகுமாரி (வயது-67) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்த நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். ...

# மட்டுவிலில் வெடிபொருள்



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் - சந்திரபுரம் கிராமத்தில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை மிதிவெடி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காணி உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் வெடிபொருளை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

தொடர்பில் விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 0201
X 8 3 8 0 3 5 X
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1405
B 16 17 20 23 B
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Double Chance 22488
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3617
சீட்டிழுப்பு திகதி 30.01.2024
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 18 29 38 73
I
86604
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 0684
வெற்றி இலக்கங்கள்
மேடம் 20 28 49 61 மேடம்
தன யோக இலக்கம் 01594
தேசிய லொத்தர் சபை
நாளுக்கான விதி எண் 22

மஹஜன சம்பத
திகதி 2024.01.30
சீட்டிழுப்பு இலக்கம் 5375
H 7 1 4 3 3 7
ரூ 1,000,000/- அதிர்ஷ்ட இலக்கம் 256623
இலட்சாதிபதி அதிர்ஷ்ட இலக்கம் 51784
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1723
வெற்றி இலக்கங்கள்
K 16 16 40 44 60
Double Chance 09876
தொலைபேசி 0112-470662, 0114-607000
www.nlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
30.01.2024 வெற்றி வாரம் 083 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து/ பாஸை ஆங்கில எழுத்து B
மற்றும் வெற்றி இலக்கம் 5 8 6 7 5 1
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கு 87060
த்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,592,235.20
DLB தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2349 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.30 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 37 54 70 ஆங்கில எழுத்து U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,919,545.60
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 14903
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
திகதி 2024.01.30 வெற்றி வாரம் 4510 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 41 43 62 65 ஆங்கில எழுத்து O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,723,586.00
செகண்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 91484
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 435
சீட்டிழுப்பு திகதி 2024.01.30
ஊதா
வெற்றி இலக்கங்கள் 07 | 33 | 41
09
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,226,040/-
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4061 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.01.30 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 16 35 59 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,346,717.60
விசேட இலக்கத்திற்கு ரூ.50,000/- பணப்பரிசு 963544
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 27 41 42 54 68
சுப்பர் இலக்கம்
1525
30.01.2024
செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 499,727,286.20
DLB DEVELOPMENT LOTTERIES தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2175
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2024.01.30
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,553,273.60
வெற்றி இலக்கங்கள் 39 47 50 70 ஆங்கில எழுத்து T
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 351515
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு



## திரு.சிற்றம்பலம் புவனேந்திரன்

[ B.Com (Hons) Jaffna ]

அதிபர் – சான்றுபெற்ற பாடசாலை அச்சுவேலி,
சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் – யாழ்ப்பாணம்

அறிவும் ஆளுமையும் இரக்கமும் இணக்கமும் வேகமும் விவேகமும் நின் சேவையதன் மைல்கற்களாம் அதிகாரமின்றியே அடுத்தவரை அடக்கியாளும் பலரினுள் நின் அதிகாரம் நோக்காது நன்சேவைதனை நல்கி கடமையதை கண்ணியமாய் தயங்காது நிறைவேற்றி சக உத்தியோகத்தர்களுடன் நற்தோழமை பேணி தம் தடம் ஸ்திரமென நல்லிடம் பதித்திட்ட சிரேஷ்ட நன்னடத்தை உத்தியோகத்தராம் - தம் ஓய்வுநிலை பயனுற வாழ்வு மிகக் களிப்புற மகிழ்வுடனும் ஆரோக்கியத்திடனும் வாழ்ந்திட நல்வாழ்த்துக்களை நவில்கிறோம். வாழியவே!!!

**நன்னடத்தை உத்தியோகத்தராக**

| | | | |
|---|---|---|---|
| பருத்தித்துறை | 2000.06.01 | - | 2003.01.10 |
| தெல்லிப்பளை | 2003.01.11 | - | 2007.11.25 |
| நல்லூர் | 2009.04.01 | - | 2011.11.17 |
| சிறுவர் நீதிமன்றம் | 2013.05.26 | - | 2015.03.31 |

**மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தராக**

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் (பதில் கடமை) | 2012.07.26 | - | 2012.10.25 |
| முல்லைத்தீவு | 2015.04.01 | - | 2017.07.10 |

**சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தராக**

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 2017.07.01 | - | 2019.08.06 |
| யாழ்ப்பாணம் (பதில் கடமை) | 2019.08.07 | - | 2024.01.30 |

**சான்று பெற்ற பாடசாலை**

| | | | |
|---|---|---|---|
| அதிபர் (பதில் கடமை) | 2007.11.26 | - | 2012.07.25 |
| அதிபர் | 2019.08.07 | - | 2024.01.30 |

வாழ்த்துவோர் –

நன்னடத்தை உத்தியோகத்தர் சங்கம், வடமாகாணம்.

(C-8244)

## 4 ஆம் ஆண்டு நினைவுகளுடன்...

அன்னை மடியில் 09 . 01 . 1945



இறைவன் அடியில் 15 . 01 . 2020

### அமரர் திருமதி சுபத்திராதேவி தணிகாசலம்பிள்ளை

**திதி : 31.01.2024 அபரபக்க ஷஷ்டி**

எத்தனை ஆண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நீங்காதம்மா!
எம்மைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த
எங்கள் குல தெய்வமே!
அன்புடனும் பண்புடனும் பழகச்
சொல்லித் தந்த தாயே!
எமக்கு நல்லறிவைக்
கொடுத்து வளர்த்த ஆசானே!
இன்று உங்கள் அரவணைப்பின்றி
உங்கள் பிரகாசமான ஒளிப்படத்தை
முன்னிறுத்தி நெஞ்சில் ஆறாத
வேதனைகளுடனும் என்றும் மாறாத நினைவுகளுடனும்
தொடர்கிறோம் எம் வாழ்வை

(18761)

இல. 672,(1036)
"சுபஸ்தான்" நாச்சிமார் கோவிலடி,
கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18802)

076 825 7716 (ஆகாஸ்)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

**விமலம் திருமண சேவை**

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன், மணமகள் தேவையெனில் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
உள்நாட்டு/ வெளிநாட்டு மணமகன், மணமகள் தாராளமாக உள்ளன.

+14372446737
கனடா +16476571347
077 240 9276

(18521)

**IELTS - New Batch ஆரம்பம்**

இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18839)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
**DBF & HDBF (10.02.2024)**
( IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம் )

**கணக்காளர் கற்கை நெறிகள்**
**Chartered Accounting Courses**
Business level - I,II (10.02.2024)
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat** [ Sri Lanka]
(AA1 - 10.02.2024)
G.C.E.O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
(AA2, AA3 -24.02.2024]
G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

**Certificate Course in English**

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

0212223382 | 0212229149
0774405917

(C-8219)

**முகாமைத்துவ உதவியாளர் தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திற்கு காரியாலய வேலைக்கு பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன.
தகைமை - A/L, ஆங்கில புலமை விரும்பத்தக்கது.

076 695 0440
075 582 8829

(18816)

**V2 VISA SERVICES**
**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
**விமான பயணச்சீட்டுக்கள்**
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8248)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாப... ...லும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org